விலை : 20.00 website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 01 சனிக்கிழமை (13.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 056

## பக்தி எழுச்சியுடன் ஆரம்பமான அனைத்துலக சைவ மாநாடு


### யாழ். பல்கலைக்கழகம் விழாக்கோலம்



(யாழ்ப்பாணம்)

அனைத்துலக சைவ மாநாடு நேற்றுப் பிற்பகல் 1.30 மணியள வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பக்திபூர்வமாக ஆரம்ப மாகியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்று விருந்தினர் கள் மங்கல 23ஆம் பக்கம் பார்க்க....



# காணாமல்போனோருக்கு அடையாள சான்றிதழ்

### பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு) வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தால் காணாமல்போனோருக்கான அடையாளப்படுத்தல் சான்றிதழ்களை உறவினர்களிடம் வழங்குவது தொடர்பான தீர் மானம் ஒன்று பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இச் சான்றிதழ் **கண்ணில் காணாத சான்றிதழ்** என்ற பெயரில் வெளியிடப்படவுள்ளதாகவும் அமைச்சர் வஜிர அபே குணர்வர்த்தன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்து; இளம் குடும்பஸ்தர் பலி

### இளைஞர்கள் இருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானது டன் இரண்டு இளைஞர்கள் படுகாய மடைந்துள்ள நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். 24ஆம் பக்கம் பார்க்க....

## இரண்டு கிலோ கேரள கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பண்டத்தரிப்பு பிரதேசத் தில் 2 கிலோ 36 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த நபர் ஒருவரை இளவாலை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து 39 வயதான பண்டத்தரிப்பை வசிப் பிடமாகக் 24ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவே ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துகிறோம்

### சர்வதேச அழுத்தங்கள் இதில் இல்லை – யாழில் மங்கள




(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் ஆணை யத்தில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தை நாம் நடைமுறைப்படுத்து வது சர்வதேசத்தின் அழுத்தத்துக் காக இல்லை, எமது கௌரவத்தை பாதுகாக்கவும் நாட்டில் நல்லிணக் கம், சமதானம் ஆகியவற்றை உரு வாக்குவதற்கே என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் ஆலோ சனைக்கான இணையத்தளம் (www.scrm.gov.lk) அறிமுகப்படுத் தலும் அது தொடர்பாக சிவில் சமூ கத்தினரின் கருத்துக்களை கேட் டறியும் நிகழ்வும் நேற்றையதினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவா 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் இன்று விசேட உரை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் இன்று ஊடகங்களுக்கு விசேட 24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ சிப்பாய் கொலை வழக்கு; 22 வருடங்களின் பின் நேற்று தீர்ப்பு

### இராணுவ அதிகாரிகள் இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி முன்னணி காவ லரண் இராணுவச் சிப்பாய் கொலை வழக்கில் கைதான இராணுவ கனிஷ்ட அதிகாரிகள் இருவர் 22 வருடங்களின் பின்னர் நேற்று முன் தினம் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மயிலிட்டி முன் னணி இராணுவ காவலரண் உள்ளே இடம்பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரின் மரணம் தொடர்பாக இரண்டு இராணுவ கனிஷ்ட அதி காரிகளுக்கு எதிராக யாழ் மேல் நீதிமன்றத்தில் கொலைக் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந் தது. 24ஆம் பக்கம் பார்க்க....

## விசுவமடுவில் கடைகள் தீக்கிரை

### பல இலட்சம் ரூபாய் இழப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

## ஜகத் புஷ்பகுமாரவிடம் ஆணைக்குழு விசாரணை



(கொழும்பு)

முன்னாள் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார பாரிய மோசடிகள. 24ஆம் பக்கம் பார்க்க....

# போர் விமான கொள்வனவு குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

## விமானப்படைப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

இந்தியாவிடமா, பாகிஸ்தானிடமா அல்லது வேறு நாட்டிடம் இருந்தா போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என இலங்கை விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் சந்திம அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஹிந்துஸ்தான் ஏரோநொட்டிக்கல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பல நோக்கு இலகு போர் விமானமான, தேஜஸ் போர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யக் கூடும் என்று இன்ரநசனல் பிஸனஸ் ரைம்ஸ் ஊடகம் வெளியிட்ட செய்தி குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேஜஸ் போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் முதல் ஏற்றுமதி வாடிக்கையாளர் என்ற நிலையை இலங்கை பெறலாம் என்றும், இந்தப் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதில் இலங்கை ஆர்வம் காட்டுவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை விமானப்படைப் பேச்சாளர்,

மிக் மற்றும் கிபிர் போர் விமானங்களுக்குப் பதிலான போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான, சாத்திய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறோம்.

எம்முன் பல தெரிவுகள் இருக்கின்றன. ஆனால் எதனைக் கொள்வனவு செய்வதென்று முடிவு செய்யவில்லை.

தேஜஸ் மற்றும் ஜே.எவ்-17 போர் விமானங்கள் பிராந்திய விமானங்கள். ஏனையவை, ஐரோப்பிய நாடுகளின் விமானங்கள். இதுபற்றி முடிவெடுக்க காலஎல்லை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, பாகிஸ்தானின் ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அதற்கு புதுடெல்லி இராஜதந்திர ரீதியான எதிர்ப்பை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## வீட்டை உடைத்து பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதன் வீதி நாச்சிமார் கோயில் பகுதியில் உள்ள வீட்டை உடைத்த கொள்ளையர்கள் அங்கிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்த 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம், நகை என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தடயங்களைப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## மதுபோதையில் மோ.சைக்கிளை செலுத்திய மூவருக்கு 3 மாத சிறை விதிப்பு

### ரூ.7 ஆயிரத்து 500 தண்ட பணத்துடன்

யாழ்.மாவட்டதில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 3 பேருக்கு 3 மாத கடூழிய சிறைத் தண்டனையும் 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணமும் விதித்து யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ். சதீஸ்தரன் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் கடந்த 2 நாட்களில் பல்வேறு சந்தர்பங்களில் மதுஅருந்திவிட்டு போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றத்துக்காக 3 நபர்களை பொலிஸார் கைது செய்தனர்

நேற்றையதினம் இவர்கள் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது நீதிபதி அவர்களை கடுமையாக எச்சரித்ததுடன் 3 மாதகால கடூழிய சிறைத் தண்டனையும் 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்டமும் விதித்துதீர்ப்பளித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதுக்காக சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## உலக சந்தையில் எரிபொருட்களின் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் பெற்றோல் விலை மேலும் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க சந்தையில் நேற்றுமுன்தினம் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்று நூற்றுக்கு ஐந்து வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை நிதி சந்தையை நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெருளாதார தடைகள் நீக்கப்பட்ட பின்னர் ஈரான் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துள்ளதுடன் ஈராக்கும் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துள்ளது.

அதேபோன்று சவூதி அரேபியாவும் எண்ணெய் ஏற்றுமதியை அதிகரித்துள்ளது. இந்த நிலைமையே எரிபொருட்களின் விலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாகும். (செ-12)

## கைத்தொலைபேசி அபகரிப்பு!

(சிவநகர்)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் இளைஞனை தாக்கிவிட்டு அவர் வசம் இருந்த பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்றையும் அபகரித்து சென்றுள்ளார்.


இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி கணேசபுரம் ரயில் வீதிக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

வெளிநாடொன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற மேற்படி தொலைபேசியினை சிவநகர் வாசி ஒருவரே பறிகொடுத்துள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இது போன்ற வழிப்பறிப்பு சம்பவமொன்று குறித்த பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்பும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-254)

## குருவாயூர் ஆலயத்தில் ரணில் பூஜை



(கேரளா)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் கேரளா மாநிலத்துக்கு நேற்றுக் காலை திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள குருவாயூர் விஷ்ணு ஆலயத்தில் பூஜை ஒன்றை நடத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஆலயத்தில் பூஜையில் கலந்து கொண்டதால், அங்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தனது மனைவியுடன் குருவாயூர் சென்றிருந்ததார்.

இன்று கண்டியில் பிரதமரது விசேட உரை இடம்பெறவுள்ள நிலையில் அவர் நேற்று இந்தியா பயணமாகியிருந்தாா என்பது கவனிக்கத்தக்கது. (செ-12)


**ALL OUT**
Pest Control Service

**கறையான் தொல்லையா?**

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.



(3385)

தொடர்புகளுக்கு :
ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200



**கோழி இறைச்சி விற்பனை**



உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் (கல்பேட்) சுகாதாரமான முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 6.00 தொடக்கம் மாலை 8.00 வரை நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

(3434)

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.


## துயர் பகிர்கின்றோம்

**அமரர் பெருமையினார் வைத்தியநாதன்**

எமது பாடசாலையில் கடமையாற்றும் திருமதி ரூபவதி தவநாதன் ஆசிரியையின் மாமனாரான "அமரர் பெருமையினார் வைத்தியநாதன்" அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு 31ம் நாள் கிரியைகளின் போது அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

(3582)


**காணி விற்பனை**

A9 வீதி, நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்பு காணி உண்டு.

(10, 7, 6, 3 1/2 ஆக பிரித்துக் கொடுக்கப்படும்)

**0778730129**

(3584)


## கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் கல்யாணமாலை இலவச திருமண சேவை நிலையத்தில் சிறிய தங்க நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்தை காட்டி கல்யாணமாலை காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதனவரி பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்-06
ஆதன இலக்கம்-28
சாவற்கட்டு றோட்,
கிராம சேவையாளர் பிரிவு-J/131 சாவற்கட்டு

வட்டாரம் 06 சாவற்கட்டு றோட் ஆதன இலக்கம் 28இல் (புதிய பதிவு) அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில் பற்று ஆனைக்கோட்டை சாவற்கட்டு இறை "பழவளவும் தக்கன் தோட்டமும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 10.12 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குணசேகரம் பெண் பிரபா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சாவற்கட்டு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரத்தினம் பங்கஜன் பெண் தர்சினி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 10363ஆம் இலக்க 2015.07.01 திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட் புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "பழவளவும் தக்கன் தோட்டமும்" நிலப்பரப்பு 01 குளி 10.12 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ் வாதனம் நவரத்தினம் பங்கஜன் பெண் தர்சினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலி தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** (3583)



வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் நேற்றைய தினம் காலை கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் பால் காய்ச்சி உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: உ.சாளின்)

# ஐ.நா. யோசனைகளை நிறைவேற்ற இலங்கை அரசு அவசரப்படக்கூடாது

## ஐ.நா.அதிகாரி அறிவுரை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் யோசனைகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் அவசரப்படக்கூடாது என்று ஐக்கிய நாடுகளின் உண்மை நீதிக்கான விசேட நிபுணர் பாப்லோ டி 'கிரிப் தெரிவித்துள்ளார்.**

கடந்த 26 ஆம் திகதி முதல் பெப்ரவரி முதலாம் திகதிவரை இலங்கையில் விஜயத்தை மேற்கொண்ட அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலகின் பல பகுதிகளிலும் இடைக்கால மாறுதல் நடவடிக்கைகள் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இலங்கையை பொறுத்தவரையில் அவ்வாறான நடவடிக்கையை உடனடியாக எதிர்ப்பார்க்க முடியாது என்று பாப்லோ தெரிவித்தார்.

எனவே மாறுதல் நடவடிக்கைகளுக்கு கால வரையறையை நிர்ணயிப்பது ஏற்புடையதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறுகிய காலத்தில் இலங்கை அரசாங்கம் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நீதி தொடர்பான நம்பிக்கையை ஏற்படு த்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் காணிகளை திருப்பியளித்தல், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித்திட்டங்கள், காணாமற் போனோரின் நிலை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் மனோதத்துவ சமூக பணிகள் இவைகளில் அடங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)




## அனுமதியின்றி கூட்டங்களை மகிந்த ராஜபக்ஷ நடத்துகிறார்

### சு.க.செயலாளர் குற்றச்சாட்டு



அனுமதி எதுவுமின்றி குரு நாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ கட்சிக் கூட்டங்களை நடத்துவ தாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் இவ்வாறு மகிந்த சந்திப்பு நடத்தி வருகின்றார். மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்டு சந்திப்பு நடத்துகின்றார்.

இவ்வாறு கூட்டங்களை நடத்துவதற்கு சுதந்திரக் கட்சி எவ்வித அனுமதியையும் வழங்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஆங்காங்கே நடத்தி வரும் கூட்டம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட கூட்டங்கள் அல்ல.

இந்தக் கூட்டங்கள் மகிந்தவின் தனிப்பட்ட ரீதியான சந்திப் புக்களாகும். எந்தவொரு நபரும் தாம் விரும்பிய ஒருவரை சந்திக்க எவ்வித தடையும் கிடையாது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பயன்படுத்தி கூட்டங் களை அனுமதியின்றி நடத்த முடியாது. அதற்கு இடமளிக்கப்படவும் மாட்டாது என துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சிங்க லேயின் சுவரொட்டிகள் கெக்கிராவை நகர்ப்பகுதியில்

### முஸ்லிம் கடைகளை அகற்ற கோரிக்கை




கெக்கிராவை நகரில் சிங்கலே என்ற பெயரில் நகரிலுள்ள முஸ்லிம் கடைகளை அகற்றுமாறு கோரி சுரொட்டிகள் நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுரொட்டிகள் ஒட்டும் போது பொலிஸாரிடம் மக்கள் முறைப்பாடு தெரிவித்த போதிலும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சுவரொட்டிகள் ஒட்டும் போது பொலிஸார் பகிரங்கமாக பார்த்துக் கொண்டு நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் பொறுமை இழந்த நகரிலுள்ள முஸ்லிம் கடை வியாபாரிகள் பொலிஸ் நிலையம் சென்று இந்த சுவரொட்டிகளை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தனர். இதனை அடுத்து நகரிலுள்ள சில சுவரொட்டிகள் இரவோடு இரவாக பொலிஸாரால் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுவரொட்டிகளில் முஸ்லிம் கடைகளை கெக்கிராவையிலிருந்து அகற்ற வேண்டும். முஸ்லிம்களை விரட்ட வேண்டும் என்ற வாசகங்கள் பொதிந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துடன் சுவரொட்டி ஒட்டியவர்கள் பேருவளை மற்றும் அளுத்கம போன்ற மாதரித்தான் இங்கேயும் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(இ)

## தேசியக் கொடியினை ஏற்ற மறுக்கவில்லை

### விஜயகலா மறுப்பு



(கொழும்பு)

விமல் வீரவன்சவின் குற்றச்சாட்டை இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மறுத்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே விமல் வீரவன்ச இந்த விடயத்தை தெரிவித்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் வினவிய போது, அவ்வாறான ஒரு விடயம் இடம்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் போது யாரும் எனக்கு தேசியக் கொடியை ஏற்றுமாறு கூறவும் இல்லை. தான் மறுக்கவும் இல்லை எனக் கூறினார்.

இது வெறும் உண்மைக்கு புறம்பான இனவாதத்தை தூண்டும் செய்தி என்றும் இது தொடர்பில் தான் எதிர்வரும் தினங்களில் பாராளுமன்றில் உரையாற்ற உள்ளதாகவும் தெரிவித்தார். (இ)

## 19ஆம் திகதிக்குள் சமூகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து - 2015 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பாடத்திற்கான அனுமதி அட்டைகள் இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வழங்கப் படவுள்ளன.

இத்திகதிக்குள் மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.

தேசிய சாரணர் பாசறைக்காக எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை கல்லூரி மூடப்படவுள்ளதால் கல்லூரிச் செயற்பாடுகள் எவையும் இடம்பெற மாட்டாது.

இதன் காரணமாக 19 ஆம் திகதிக்குள் அனுமதி அட்டைகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளவுள்ள மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் சமூகமளித்தல் வேண்டும் என்பதுடன் தேசிய அடையாள அட்டையும் எடுத்து வரல் வேண்டும். தபால் அடையாள அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அதன் போட்டோப் பிரதியுடன் சமுகமளித்தல் வேண்டும் என அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை சுங்கத்திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கென திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மே மாதத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பிரதான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் க.பொ.த. (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளில் பிரதான பாடங்களான சிங்களமொழி அல்லது தமிழ்மொழி மற்றும் கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இல. 1503 கொழும்பு என்ற முகவரிக்கு 2016 மார்ச் மாதம் 14 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 12.02.2016 இல் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ



சாவகச்சேரி மகாதேவ சர்மாவின் ஒழுங்கமைப்பில் அண்மையில் நடைபெற்ற தொடர் வைபவமான ஐயப்பன் வழிபாட்டின் போது உரும்பிராய் ஐயப்பன் தேவஸ்தான பிரதமகுரு தனுவாசுதேவாக் குருக்களினால் ஓதுவார் திலகம் பொன்.கந்தசாமி பஜனைக் குழுவினருக்கு பொன்னாடை போர்த்தி ஆசீர்வசிப்பதை படத்தில் காணலாம்.

## இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்



எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ள இந்தியாவுடனான பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு எதிர்புத் தெரிவித்து தொழிற்றுறை நிறுவனங்களால் நேற்று முன்தினம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த உடன்படிக்கையின் மூலம் இரண்டு நாடுகளும் படிப்படியாக தமது சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன. தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் கப்பல் கட்டும் சேவைகளில் ஈடுபடும் தொழிலாளர்களை சுதந்திரமாக இரு நாடுகளுக்குமிடையில் செயற்படுவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது. மேற்படி சேவைகள் தொடர்பான திட்ட நடைமுறைகள் குறித்த உடன்படிக்கை இந்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ளது. (3)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இம் மருத்துவ முகாமில் தொற்றா நோயுள்ளவர்களை (நீரிழிவு நோய், இரத்த அழுத்தம்) இனம் காணப்படுவதற்கான மருத்துவப் பரிசோதனைகளும் அதற்கான ஆலோசனைகளும் மருந்துகளுடன் வழங்கப்படும்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான விசேட மருத்துவ பரிசோதனைகளும் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

மேலும் சாதாரண நோய்கள் என்பவற்றுக்கும் மருத்துவ பரிசோதனைகள் இடம் பெறும்.

எனவே இவ் இலவச மருத்துவமுகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறும் நீரிழிவு நோயுள்ளோர் 12 மணி நேர உணவுத் தவிர்ப்புடன் சமுகமளித்தல் வேண்டுமெனவும் மௌலவி. பி.ஏ.எஸ். சுப்யான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 077 738 1033 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வழிபடுவோர் சபைப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் வருடாந்த திருமுறை முற்றோதலில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் இன்று சனிக்கிழமை யாழ். கந்தர்மடத்தில் அமைந்துள்ள அகில இலங்கைத் திருமுறை மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் தொலைத் தொடர்பு நிறுவன தீர்வுகள் உதவிப் பொது முகாமையாளர் ச.நவநீதன் கலந்து கொள்வதுடன் பரிசில்களை திருமதி சிவபானு நவநீதன் வழங்கவுள்ளார். (இ-5)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## சபாபதி கந்தசாமி ஆச்சாரி

**தோற்றம்:- 29.08.1928**

**மறைவு:-09.02.2016**



யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி காளி கோயிலடி உடுவிலை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய சபாபதி கந்தசாமி அவர்கள் 09-02-2016 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் துரைசாமி (போமன் உடுவில்) அவர்களின் அன்புச் சகோதரரும் மாவிட்டபுரம் காலஞ்சென்ற கந்தையா குணவதி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலாதேவி, இலங்கேசன், தயாளினிதேவி, இளங்கோவன் (கோபு), சாந்தினிதேவி, பத்மினிதேவி, இளங்கீரன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதிகா, பரமேஸ்வரன், சுதாஜினி, உதயகுமார், குகனேசன், ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன், சஞ்சயன், நிதர்ஷன்(அமரர்) கீர்த்தனன், சங்கர்சன், சௌமியா, மிதுஷன், பிருந்துஷா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் மனோஜ், இராமப் பிரியா (பூஜா), யாதவன், சதுர்னா, ஹம்ஷிகா, தர்ஷன் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது உடுவில் இல்லத்தில் 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:- ஸ்தபதி.க.இளங்கோவன்(கோபு)

S.N.நிதர்ஷன் சிற்பாலயம், இல.07 பிரேசர் அவனியூ, தெகிவளை.

(3580)

# சைவ மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை நடாத்தும் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வில் ஆய்வடங்கல் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. இந்த ஆய்வு அரங்குள் 12 அரங்குகளாக 12 மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய புவியியல் துறை மண்டபம் இல. 2 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள் அரங்கு பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், கலாநிதி க.ஸ்ரீ கணேசன் ஆகியோரின் தலைமையில் இடம்பெறும்.

புவியியல் துறை மண்டபம் இல.3 இல் நடைபெறவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கு பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், திருமதி.சி.சிறிசற்குணராஜா ஆகியோர்தலைமையில் இடம்பெறும். பொருளியியல்துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் சேர்.பொன் இராமநாதன் அரங்க பேராசிரியர்எஸ்.சிவலிங்கராஜா சித்த மருத்துவ கலாநிதி என்.சிவண்முகராஜா ஆகியோர்தலைமையில் இடம்பெறும்.

புவியியல்துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அரங்கு திருமதி நாச்சியார் செல்வநாயகம், பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

புவியியல்துறை மண்டபம் இல.3 இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அரங்கு பேராசிரியர் வி.பி.சிவநாதன், கலாநிதி க.கஜவிந்தன் ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.பொருளியல் துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும்சேர்.பொன்.இராமநாதன் அரங்கு பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.

புவியியல்துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அரங்கு பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பிரம்மஸ்ரீ ச.பத்மநாதன் ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.

புவியியல்துறை மண்டபம் இல.3 இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கு பேராசிரியர் கு.மிகுந்தன், பேராசிரியர்கே.சிவானந்தமூர்த்தி ஆகியோர் தலைமையில் இம்பெறும். பொருளியல் துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் சேர்பொன் இராமநாதன் அரங்கு பேராசிரியர் தி.வேல்நம்பி, கலாநிதி ம.பால கைலாசநாதசர்மா ஆகியோர் தலைமையில் இடம்பெறும். புவியியல்துறை மண்டபம் - இல.2 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் அரங்க பேராசிரியர் க.நாகேஸ்வரன், பேரசிரியர் அவிமணி வாசகர் ஆகியோர் தலைமை யில் இடம்பெறும். புவியியல் துறை மண்டபம் இல.3 இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கு கலாநிதி க.சுதாகர், கலாநிதிதிருமதிவிபவநேசன் ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.

பொருளியல்துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் சேர் பொன். கோ.பொண் இராமநாதன் அரங்கு சிரேஷ்ட பேராசிரியர் நா.ஞானகுமாரன், க. இரகுபரன் ஆகியோர் தலைமையில் இம்பெறும். (இ-5)

# நகரப் பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளை கிராமப்புறங்களுக்கு மாற்றுவதற்கு முடிபு

நகரப் பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளை, கிராமப்புறங்களுக்கு மாற்றவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீளகுடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராமங்களுக்கு மாற்றப்படும் சிறைச்சாலைகள், திறந்தவெளி சிறைச்சாலைகளாக செயற்படும் என அமைச்சின் செயலாளர் வி. சிவஞானஜோதி தெரிவித்தார்.

திறந்தவெளி சிறைச்சாலையில், குற்றவாளிகளை மீண்டும் குற்றமிழைக்காதவர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சிறைச்சாலைகளில் சுகாதார வசதிகள் மற்றும் பராமரிப்புகளை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் காரணமாக சிறைச்சாலை அறைகளுக்குள்ளேயே கைதிகள் இருக்கவேண்டிய தேவை ஏற்படாது எனவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் வருடாந்தமஹோற்சவவிஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கமைய 20 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ-5-60)

# கால்வாய் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது

கால்வாய் வலைப் பின்னலின் ஊடாக பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

கொழும்பில் 43 கிலோ மீற்றர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள இந்த கால்வாய் மூலமே போக்குவரவு மேற்கொள்ளப்படவுள்ளதாக காணி சீர்திருத்த அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவையும் வழங்கியுள்ளது. பெருநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த கால்வாய்களின் ஊடாக மிதக்கும சந்தைகளை அமைக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## அவசர ஒன்றுகூடல்


மாச்20ஆம்திகதி யாழ். பல்கலைக் கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதால் B.B.M-1st, Batch, B.A.-2011, B.com-2010,2011 ஆகிய கல்வியாண்டு பட்டச் சான்றிதழ் பெறும் பட்டதாரி மாணவர்களை, நிகழ்வு ஒழுங்கமைப்பு தொடர்பாக கலந்துரையாட வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திகதி:14.02.2016
நேரம்: 11.30 மணி
இடம்:- நாவலர் கலாசார மண்டபம்

(3581)

வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1934 . 06 . 04

விண்ணில் 2016 . 01 . 14

அமரர் செல்லப்பா பொன்னுச்சாமி (இளையயா)

அப்பா அவனியில் நீ
அகன்று மாதம் ஒன்று
ஆனதுவோ - ஆறுதல்
அளிக்க யாருமின்றி - நாம்
ஆறுமோ எம்மிதயம்

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1943 . 04 . 26

விண்ணில் 2015 . 02 . 03

அமரர் பொன்னுச்சாமி நாகேஸ்வரி

ஓராண்டு வந்ததும்மா - உங்கள்
நினைவு ஆறவில்லை
நீங்கள் இல்லாத மனை பொலி
விழந்து நிற்குதம்மா
உங்களை நினைத்து தினம், தினம்
ஏங்கி நிற்கிறோம் அம்மா...

நீங்கள் இருவரும் இன்றித் தவிக்கும்
குடும்பத்தினர்
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(3557)

## இராசி பலன்

13.02.2016
(மாசி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
பஞ்சமி முற்பகல் 11.06 மணிவரை
ரேவதி முற்பகல் 11.24 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| சூரி கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அத்தம்<br>காலை 10.46 இற்கு<br>மே-சந் | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்** கனவு பலிதமுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்கள் நலன் கருதிய செலவுகள் கூடும் நாள், பக்குவமாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வருங்காலத்திற்கான புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**துலாம்** போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** மனக்குழப்பம் அகலும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழில் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், பிறருக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**கும்பம்** முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும் வழிபாட்டால் பெருமை காண்பீர்கள்.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வார்த்தைகளால் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



# விபத்தை ஏற்படுத்தி விட்டு அதனை விபத்து மரணம் எனக்கூற முடியாது



# நீதிபதி இளஞ்செழியன் கட்டளை

விபத்தை ஏற்படுத்தி விட்டு அதனை விபத்து மரணம் எனக் கூற முடியாது. சாரதிக்கும் நடத்துநருக்கும் எதிராக கொலை வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளையிட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 14 ஆம் திகதி நீர்வேலி பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சின்னட்டி சண்முகம் (வயது -65) என்பவரை மோட்டார் வாகனத்தால் மோதி இறப்பு விளைவித்ததுக்காக வாகன சாரதி ஒருவருக்கு யாழ். நீதவான் நீதிமன்றால் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதமும், ஒருஇலட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்ட ஈடும் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் வாகன அனுமதிப் பத்திரமும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

குறித்த சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரத்தை மீள வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் மீளாய்வு மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மீளாய்வு விண்ணப்ப வழக்கு நேற்றுமுன்தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி மேற்கண்டவாறு கட்டளையிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அண்மைக்கால போக்குவரத்து மரணங்கள் யாழ்ப்பாண சமூகத்தின் மத்தியில் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்துவது, அதிவேகமாக போட்டியிட்டு ஓடி வாகனம் செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனம்செலுத்துவது போனற காரணங்களின் அடிப்படையில் விபத்து ஏற்பட்டு விபத்து மரணம் என நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் விபத்தை ஏற்படுத்திவிட்டு அதனை விபத்து மரணம் எனக் கூற முடியாது. சாரதிக்கும் நடத்துநருக்கும் எதிராக கொலை வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இதனை போக்குவரத்து பொலிஸ் பிரிவு சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்து மதுபோதையில் வாகனம் ஓடி விபத்தை ஏற்படுத்தி மரணம் ஏற்படுத்துபவர்கள், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தி விபத்து மரணத்தை ஏற்படுத்துபவர்கள், வேண்டுமென்று போட்டிக்கு வாகனத்தை ஓடி அதிகவேகமாக சென்று விபத்து மரணம் ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக விபத்து மரணம் என வழக்குத் தாக்கல் செய்யாது கொலைவழக்காக தாக்கல் செய்யப்படவேண்டும்.

எதிர்காலத்தில் மாணவர்கள்,முதியோர்கள் வீதியில் செல்லமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி யாழ்ப்பாணத்தில் தனியார் போக்குவரத்து பேருந்துச் சாரதிகளும் இ.போ.சபை பேருந்து சாரதிகளும் மிக முக்கியமாக இந்த விபத்துகளுக்கு காரணமாக அமைகின்றார்கள்.

அவர்களுக்கு அரசாங்க நிர்வாக அதிகாரிகளால் பல தடவைகள் ஆலோசனைகள், புத்திமதிகள் வழங்கப்பட்டபோதும் அவர்கள் திருந்துவதாக தெரியவில்லை. சட்டத்தை கையில் எடுத்து விபத்து மரணம் ஏற்படுத்துபவர்களுக்கு கொலை வழக்குத்தாக்கல் செய்வதே பொருத்தமானதாகும்.

அந்தவகையில் பின்வரும் விடயங்கள் மன்றின் கவனத்தில் கொண்டுவரப்படுகிறது.

யாழ் - பலாலிவீதி,யாழ் - கே.கே.எஸ் வீதி,யாழ்- பருத்தித்துறை வீதி,யாழ் - மானிப்பாய் வீதி,யாழ் - கண்டி வீதி,யாழ் - பண்ணைவீதி, ஆகிய வீதிகளில் பயணம் செய்கின்ற அனைத்து இ.போ.சபை பேருந்து சாரதிகளுக்கும்,தனியார் போக்குவரத்து சாரதிகளுக்கும் நீதிமன்றம் கடைசி எச்சரிக்கையாக பின்வரும் விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுக்கும்படி பணிப்புரை பிறப்பிக்கின்றது. →



1)குறிக்கப்பட்ட பேருந்து ஒழுங்குமுறையில் பராமரிக்கப்பட்டிருக்கிறதா? என்பதை தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்கள் உடனடியாகப் பரிசோதனை செய்து அவற்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2)இந்த பேருந்து மிதிபலகையில் நடத்துநர்கள் நின்று மற்றைய வாகனங்களை மறித்து மற்றைய வாகனங்களை முந்தி செல்வதற்கு முயற்சிக்கின்ற அனைத்து நடத்துநர்களும் எதிர்காலத்தில் கைது செய்யப்பட்டு மறியற்சாலையில் அடைக்கப்படுவார்கள்.

3)தனியார் போக்குவரத்து பேருந்துச் சாரதிகள் வேகமாகவும் அதிவேகமாகவும் அதேநேரம் போட்டிக்கு வாகனம் ஓடி ஒரு வாகனத்தை மற்ற வாகனம் முந்திச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தனியார் போக்குவரத்து பேருந்துகளின் போக்குவரத்து உரிமம் இரத்துச் செய்யப்படும். சாரதிகளுடைய அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். குறிக்கப்பட்ட பேருந்து பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாது என்ற கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கும் என அனைத்து தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்களுக்கும் நீதிமன்றம் இறுதி எச்சரிக்கை செய்கின்றது.

4)குற்றச்செயல் செய்த எந்தவொரு பேருந்தும் நீதிமன்றினால் விடுவிக்கப்படமாட்டாது. இ.போ.ச.பேருந்துச் சாரதிக்கும் நடத்து நருக்கும் தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்களுக்கும் எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படும். சாரதியும் நடத்துநரும் கைது செய்யப்பட்டு கொலை வழக்கில் மறியலில் அடைக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும். நீதிமன்றைப் பொறுத்தவரையில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு நீதிமன்றுக்கு உண்டு. குற்றச் செயல்களைச் செய்பவர்களுக்கு நீதிமன்றம் தயவு தாட்சண்யம் இன்றி இரக்கமின்றி தண்டனை வழங்க வேண்டும். வழங்கு விசாரணைகள் முடிவடையும் வரையும் குறிக்கப்பட்ட வாகன உரிமம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இரத்துச் செய்யப்பட்டு சாரதிக்கும் நடத்துநருக்கும் எதிராக கொலை வழக்கு தாக்கல் செய்யப்படும். பிணையும் இலகுவில் வழங்கப்படமாட்டாது.

5)இலங்கை வரலாற்றில் பொல்காவலை புகையிரதக் கடவையில் தனியார் போக்குவரத்து பேருந்து சென்று விபத்து மரணம் ஏற்படுத்திய வழக்கில் கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை முன்னுதாரணமாக காணப்படுகின்றது.

6)அடுத்ததாக இ.போ.ச. பேருந்துச் சாரதிகள் தனியார் போக்குவரத்து பேருந்துகளுடன் போட்டிபோட்டு ஓடக்கூடாது. இ.போ.ச. பேருந்து நடத்துநர்கள் மிதிபலகையில் நின்று பயணிக்கக்கூடாது. தனியார் போக்குவரத்து பேருந்து நடத்துநர்கள் மிதி பலகையில் நின்று பயணிக்கக் கூடாது.

7)இப்படியான குற்றச் செயல்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற இனிமேல் அனுமதிக்க முடியாது. கூட்டங்கள் போட்டு ஆலோசனை வழங்க முடியாது. புத்திமதிகள் சொல்ல வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை. சிறைத்தண்டனைகள் மட்டுமே இக்குற்றச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என நீதிமன்றம் எச்சரிக்கை செய்கின்றது.

8) இந்த விடயத்தில் இறுதியாக இ.போ.ச.தலைவர் மற்றும் உயரதிகாரிகள் இவ்விடயத்தை உடனடியாக கவனத்தில் எடுக்க வேண்டும். இ.போ.ச.தலைவர் ,உயரதிகாரிகள் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து இ.போ.ச. சாரதிகளும் நடத்துநர்களும் என்ன செய்கிறார்கள் என்பது தெரியாது இருக்க முடியாது. வீதிக்கு இறங்கி கடமை செய்ய வேண்டும். அனைத்து இ.போ.ச. தலைவரும் உயரதிகாரிகளும் சாரதிகளும் நடத்துநர்களும் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்ப டுத்தப்படுவார்கள். அரச கடமையைச் செய்யத் தவறும் இ.போ.ச.தலைவர் , உயரதியாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

9)அதேபோன்று தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாள ர்களுக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை செய்கிறது. தனியார் போக்கு வரத்து பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்படுவார்கள் .சட்ட நடவடிக்கைகள் அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் எதிராக எடுக்கப்படும்.

10)தனியார் போக்குவரத்து பேருந்து சங்க உறுப்பினர்கள் சங்கம் வளர்த்துக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. ஒழுக்கம் இல்லாத பேருந்துச் சாரதிகளுக்கும் ஒழுக்கமில்லாத பேருந்து உரிமையாளர் களுக்கும் சங்கம் வளர்க்க வேண்டிய அவசியமில்லை. தனியார் போக்கு வரத்து பேருந்துச் சங்கம் நீதிமன்றினால் தடையுத்தரவிட்டு மூடப்படும் உத்தரவு பிறப்பிக்கப்படும். தனியார் போக்குவரத்து பேருந்துச் சங்கம் இயங்கக்கூடாது என்ற உத்தரவு இனிமேல் மன்றினால் பிறப்பிக்கப்படும். தனியார் போக்குவரத்து பேருந்துச் சங்க உறுப்பினர்கள், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் நீதிமன்றுக்கு அழைத்து சட்ட நடவடி க்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். மக்களுடன், மக்கள் வாழ்க்கையுடன் மக்கள் உயிருடன் விளையாடும் எந்தச் சங்கத்திற்கும் யாழ்ப்பாணத்தில் இடமில்லை. அந்தச் சங்கத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு உரிய சிறைத் தண்டனை வழங்கப்படும் என நீதிபதி எச்சரிக்கை செய்துள்ளார்.

11)போக்குவரத்து வாகனங்களைப் பரிசோதனை செய்யும் ஆணையாளர்கள், பரிசோதகர்கள், யாழ்ப்பாண இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து வீதியில் ஓடுவதற்கு தகுதியானதா? என உடன் சோதனை நடவடிக்கை எடுக்கவேண்டும். நீதிமன்றுக்கு அழைக்கும் போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட

(இ-9)




## திருச்சொரூப தேர்ப்பவனி

மாதகல் தூய லூர்து அன்னையின் திருத்தல வருடாந்த திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சொரூப தேர்ப்பவனியும் நற்கருணை விழாவும் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயரின் தலைமையில் திருநாள் திருப்பலி இடம்பெறவுள்ளது.

இவ்வாலயத்தின் கொடியேற்றம் கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இலவச கணனிப் பயிற்சி நெறி

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மற்றும் பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவச அடிப்படையில் கணனிப் பயிற்சி நெறியானது **இரட்ணம் அறக்கட்டளை நிறுவனத்தின் (இங்கிலாந்து)** நிதிப்பங்களிப்பின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் இல.08/03, பரமேஸ்வரா கல்லூரி வீதியிலுள்ள தியாகலிங்கம் கல்வி நிலையம், திருநெல்வேலி பழனி ஆண்டவர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல்நிலையம்கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் ஆகிய இடங்களில் தொடர்பு கொள்ளுமாறு நிலைய திட்டப்பணிப்பாளர் ஆ.ரஞ்சித சைலேந்திரகுமார் அறிவித்துள்ளார். (இ-5)

## யாழ்.நகரில் நேற்றுப் பதற்றம்!

# மாணவனுக்கு நீதிகோரி கண்டனப் போராட்டம்

### கையொப்பம் பெற்றதோடு ஊர்வலமும் இடம்பெற்றது


**(யாழ்ப்பாணம்)**

**தனியார் பேருந்து சாரதியின் பொறுப்பற்ற சாரதியத்தால் திருநெல்வேலி பகுதியில் ஆட்டோவுடன் விபத்துக்குள்ளாகி ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்ற மாணவன் பார்த்தீபன்சுவஸ்திகன்(வயது 6) உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி கோரி யாழ்.நகரில் நேற்றைய தினம் கண்டன ஊர்வலத்துடன் கூடிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**









யாழ்.இந்து கல்லூரி அருகாமையில் நேற்றைய தினம் கையொப்பம் பெறுதலுடன் ஆரம்பமாகிய ஊர்வலம், கஸ்தூரியார் வீதியூடாக சென்று யாழ்.நகரில் கண்டன போராட்டம் ஒன்று நடைபெற்றது. இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சேவை யில் ஈடுபட்ட பேருந்துகளை வழி மறிப்பு செய்தமையால் யாழ். நகரில்பெரும்பதற்றம்நிலவியது.

சம்பவ இடத்திற்கு வந்த கலகம் அடக்கும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து விலகி செல்லுமாறு பணித்தனர். எனினும் அங்கிருந்து விலகி செல்ல அவர்கள் மறுத்தமையால், பெரும் பதற்றம் நிலவியது. சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன் போது யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனுக்கான மகஜரும் யாழ்.உதவி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த 3ஆம் திகதி இ.போ.ச. பேருந்தும் தனியார் பேருந்தும் பலாலிவீதியில் போட்டி போட்டு ஓடியதில் தனியார் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து திருநெல் வேலி சந்திக்கு அருகில் எதிரே வந்த ஆட்டோவை மோதித் தள்ளியது.

அதில் ஆட்டோவில் பயணித்த தாய்மகன் மற்றும் ஆட்டோ சாரதி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்ற பார்த்தீபன்சுவஸ்திகன் (வயது 6) எனும் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

இச்சம்பவத்திற்கு பின்னர், அன்பான வாகன சாரதிகளுக்கு ஓர் அறிவுபூர்வமான வேண்டுகோள், வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசியை துண்டித்து, மது அருந்துவதை விடுத்து, போட்டியை விடுத்து, வேகத்தை குறைத்து வாக னத்தை செலுத்துவோமே, நீங்கள் விதியை மீறியதால் என் விதி முடிந்தது. சாதிக்க வேண்டிய என்னை சாக டித்து விட்டீர்கள். நானும் உங்கள் குழந்தை தானே, உங்கள் பசிக்கு பலியானதில் நானே கடைசி ஆளாக இருக்கட்டும். இப்படிக்கு, இனிஉங்களோடு காற்றாக வாழும் சுவஸ்திகன் என அச்சிடப்பட்ட விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் மாணவர்களது பெற்றோர்கள் ஒன்றிணைந்து மேற்படி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன் போது தமது வாய்களை கறுப்பு துணியால் கட்டியபடியும், சாரதிகளே இந்த அவசரம் யாரை கொல்வதற்கு? உங்கள் காசு போட்டிக்கு கருகியது கடைசியாக நானாக இருக்கட்டும், சாரதிகளே நீங்கள் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் நான் தப்பியிருப்பேன், என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (இ-4)

## கிராம அலுவலர் III; போட்டி பரீட்சை

நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெற்றிடங்கள் நிலவும் கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களைநியமிப்பதற்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் எழுத்து மூல பரீட்சைக்குத் தோற்றுவதற்குபின்வரும்தகைமைகள் உள்ள ஆண்/பெண் இருபாலாரிமிருந்தும்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

வயதெல்லை-விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்துக்கு 21 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும்இருத்தல்வேண்டும். விண்ணப்பதாரர் களுக்குப் பின்வரும்கல்வித்தகைமை இருத்தல் வேண்டும்.

அ) கல்விப் பொதுத் தராதரத்தில் (சாதாரண தரம்) பரீட்சையில் முதல் மொழியாக சிங்களம்அல்லதுதமிழ்மொழி ஆகிய பாடங்களுள் ஒரு பாடத்தினையும் கணிதம் உள்ளடங்கலாகஆகக்குறைந்தநான்கு (4) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். அத்துடன்

ஆ) கல்விப் பொதுத்தராதர உயர்தரபரீட்சையில்அனைத்துப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சைமற்றும்ஆங்கிலமொழி தவிர) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று (3) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருப்பது போதுமானது.

விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 2016. 03.14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் நாய கம், இலங்கைபரீட்சைத்திணைக்களம், த.பெ.இல1503,கொழும்புஎனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 12.02.2016 இல்வெளியானவர்த்தமானி பத்திரிகையில்பார்வையிடலாம்.(இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:18 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியளாளர் லண்டன்<br>தொ.இ: B/3912 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூசம<br>கி.பா: 42 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: 10ம் தரம்<br>தொ.இ: G/4446 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/3913 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 14சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ACCA/ கணக்காளர்<br>தொ.இ: G/4451 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MSc, PHDகனடா<br>தொ.இ: B/3917 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 37 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:ICT/அரசதொழில்<br>தொ.இ: G/4466 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:QSஓமான்<br>தொ.இ: B/3918 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 67செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/4472 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# பாடசாலைகளில் அமையவுள்ள தொழில்நுட்ப பீடங்கள் 5 மாகாணங்களுக்கும் பகிரப்பட வேண்டும்

## வடக்கு மாகாணசபையில் பிரேரணை நிறைவேற்றம்

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே தொழில்நுட்பத்துறைக்கான தொழில்நுட்பப்பீடம் அமைக்கப்பட்டுள்ள 19 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதைவிட வடக்கு மாகாணப் பாடசாலைகளில் அமையவுள்ள 5 தொழில்நுட்பப்பீடங்களை மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் முல்லைத்தீவு மாவட்டம் ஒதுக்கப்படக்கூடாது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 45 ஆவது அமர்வு அண்மையில் கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதிலேயே இப்பிரேரணை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் ரவிகரன்,

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே தொழில்நுட்பத்துறைக்கான தொழில்நுட்ப பீடம் அமைக்கப்பட்டுள்ள 19 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதற்கமைய முதலாம் கட்டமாக முறையே,

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை வடமராட்சி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி தென்மராட்சி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, வித்தியானந்தாக் கல்லூரி முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம் மன்னார், முருங்கன் மகா வித்தியாலயம் மன்னார், மடுக்கந்தை தேசிய பாடசாலை வவுனியா தெற்கு, வவுனியா ம.மகா வித்தியாலயம் வவுனியா தெற்கு, தருமபுரம் மகா வித்தியாலயம், யாழ் இந்து கல்லூரி யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், நெல்லியடி மத்திய கல்லூரி வடமராட்சி, மானிப்பாய் இந்துக் கல்லூரி வலிகாமம், புத்தூர் சோமஸ்கந்தா யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி கிளிநொச்சி ஆகிய பாடசாலைகளில அமைக்கப்பட்டுள்ளது.

இதை விட மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தொழில்நுட்ப பீடம் இல்லாமல் 19 பாடசாலைகள் காணப்படுகின்றது. இந்நிலையில் மத்திய அமைச்சில், தொழில்நுட்பபீடம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடலில் உத்தேசமாக 2ம் கட்டத்தில் தீவு முழுவதுமாக 50 பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப பீடங்கள் அமைப்பதற்கான நிதிக்கு உத்தேச ஒப்புதல் கிடைத்துள்ளது. விகிதாசார ரீதியில 5 அல்லது 6பாடசாலைகளுக்கு வடக்கில் கிடைப்பதற்கு சாத்தியமுள்ளது.

தற்போது மாகாணக்கல்வி அமைச்சின் உத்தேச தீர்மானமாக 5 பாடசாலைகளில் முல்லைத்தீவுக்கு தொழில்நுட்ப பீடத்தை ஒதுக்காமல் விடக்கூடிய சாத்தியமுளளதாக அறியமுடிகிறது. இந்த நிலையானது தவிர்க்கப்பட வேண்டும். ஐந்து தொழில்நுட்ப பீடங்கள் கிடைக்கும் பட்சத்தில் தலா ஒன்று வீதம் 5 மாவட்டங்களுக்கும் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும். இதுவே நியாயமானதாகும். முல்லைத்தீவை ஒதுக்க வேண்டாம். மேலும் தெரிவு செய்யப்பட்டு தொழில்நுட்ப பீடங்கள் அமைக்கப்படாத பாடசாலைகளில் முல் லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் மல்லாவி மத்திய கல்லூரி ஆகியன இருக்கின்றது. எமது மாவட்டத்தில் மேற்படி இரண்டு பாடசாலைகளுக்கும் தொழில்நுட்ப பீடம் அமைக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மிகவும் பின் தங்கிய போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் தற்போது தான் ஓரளவுக்கு மேற்படி தாக்கத்திலிருந்து விடுபட்டு மீண்டும் கல்வியில் அக்கறை காட்டி வரும் இச்சமயத்தில் மாணவர்களை அதிகமாக கொண்ட பகுதியில தொழில்நுட்பப் பீடத்தை உருவாக்கி எதிர் காலத்தில் இக்கற்கை நெறிக்கு முல்லைத்தீவு மாணவர்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்றார். (2-3)

# பொலிஸ் நிலையம் அலைந்து திரிந்த மூதாட்டிக்கு பணம் சேகரித்து கொடுத்த முள்ளியவளை பொலிஸார்

(வற்றாப்பளை)

கடனாகக் கொடுத்த பணத்தை நீண்டகாலமாக மீளப்பெற முடியாமல் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து அலைந்து திரிந்த மூதாட்டி ஒருவரின் மன உளைச்சலையும் ஏக்கத்தையும் கருத்தில் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சேகரித்த பணத்தை ஒன்றுதிரட்டி பிரஸ்தாப மூதாட்டியிடம் வழங்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில்தெரியவருவதாவது,

முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியைச் சேர்ந்த 72 வயதான மூதாட்டி ஒருவர் தனது வாழ்வாதாரத்திற்காக கச்சான் வியாபாரத்தை செய்து வருகின்றார்.

பிரஸ்தாப மூதாட்டியிடம் கடந்த வருடம் முள்ளியவளை கேப்பாபுலவைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒரு தொகைப்பணத்தை கைமாற்றாகப் பெற்றதுடன் நீண்டகாலமாக அதனைத் திருப்பி கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இதனால் விரக்தி அடைந்த மூதாட்டிமுள்ளியவளைப்பொலிஸ்நிலைய சிறுகுற்றப் பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை பதிவு செய்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைக்காக குறித்த நபரை பொலிஸ் நிலையம் வருமாறு பலதடவைகள் அறிவித்தும் சமுகமளிக்காத நிலையில் பல தடவைகள் பொலிஸ் நிலையம் வந்துசென்ற மூதாட்டியின் பரிதாபநிலையைக்கருத்தில்கொண்டு பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றப் பிரிவில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து பணத்தை தம்முள் சேகரித்து குறித்த மூதாட்டியிடம்கொடுத்துதவியுள்ளனர்.

இது விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மூதாட்டி தற்போது பொலிஸார் 3 ஆயிரத்து 200 ரூபாவை சேகரித்துத் தந்துள்ளனர். அதற்கு நன்றிசெலுத்துவதாக தெரிவித் தார். (2-3-310)

# கணவாய் பிடிக்கும் முறை குறித்து மன்னார் மீனவர்கள் அதிருப்தி

மன்னார் பகுதிகளிலுள்ள கடலுக்கு அடியில் குழைகளை வைத்து கணவாய் பிடிப்பதனால் விரைவில் கணவாய்இனம்அழியும்நிலை காணப்படுவதாக மன்னார் மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிகையில்,

கணவாயை பிடிப்பதற்காக கடலுக்கு அடியில் மரக்கிளைகளை வைககும் போது, கடற்கரையி லுள்ள மண்களை உரப்பைகளில் அடைத்து அதனையும் கடலுக்கு கீழ் அவற்றுக்குப் பாரமாக வைக்க ப்படுவதாகவும் அவர்கள் குறிப்பி டுகின்றனர.

இதற்காக ஆயிரக்கணக்கான உரப்பைகளில் கடற்கரையில் இருந்து மண் அகழ்ந்து எடுப்பதாகவும் இதனால் கடலரிப்பு ஏற்படுவதற்கு ஏதுவாக அமைவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டைத் தடுக்க கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுக்காமை கவலை அளிப்பதாகவும்மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடலுக்கு அடியில் வைக்கப்படும் பற்றைப் பகுதிக்குள் கணவாய்கள் இனப்பெருக்கத்திற்காக அதிகமாக வருவதாகவும் இதன்போது, கணவாயை பிடித்து செல்லும் மீனவர்கள குஞ்சு கணவாயையும் பிடித்து செல்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் எதிர்காலத்தில் கணவாய் இனம் அழிந்துபோகும் நிலை் உருவாகி வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இதனைத்தடுத்து நிறு த்த கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-3)

# முள்ளியவளை முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தை சீராக இயக்குமாறு கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை பிரதேச முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தை சீராக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், பொது மக்கள் ஆகியோர் கரைதுறைப் பற்று பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட மேற்படி சங்கமானது சுமார் ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் சட்டரீதியாகப் பதிவு செய்யப்படாதுஇயங்கி வருகிறது. மேலும் அச்சங்கத்தின் செயற்பாட்டு நிதி அறிக்கைகள் அதிகாரிகளினால் கணக்காய்வுக்குட்படுத்தப்படாது இருப்பதுடன் தொடர்ச்சியாக உள்ள நிர்வாகத்தினரே அதனை தொடர்ந்தும் நடத்தி வருவதாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் நலனை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சங்கமானது அதன் செயற்பாடுகளை மந்தகதியில் இயங்கிச் செல்வதாகவும் எனவே காலம் தாழ்த்தாது நிர்வாகத்தைக் கூட்டி சீரமைப்பு செய்வதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலர், உரிய அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மேற்படி பிரதேச முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-3-310)




# மனிதவள முகாமைத்துவமும் வினைத்திறன் விருத்தியும் தொடர்பான செயலமர்வு

கிளிநொச்சியில் அமைந்துள்ள கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு இல 82ஏ, கரடிப்போக்கில் மனித வள முகாமைத்துவ விரிவுரையாளர் கலாநிதி கணபதிப்பிள்ளை குகதாசனினால் மனிதவள முகாமைத்துவமும் வினைத்திறன் விருத்தியும் தொடர்பிலான செயலமர்வு நடைபெறவுள்ளது. இவ்வலுவூட்டல் கருத்தரங்கில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிர்வாகம் கேட்டுள்ளது. (2-3-298)

# 7 கிலோ மீற்றர் நீள புலோப்பளை வீதி செப்பனிடப்படும் விந்தை காணீர்

ஏ-9 வீதிகளில் பளை நகரில் இருந்து அறத்தி நகருக்குச் செல்லும் 7 கிலோ மீற்றர் நீளமான புலோப்பளை வீதி இதுவரை முழுமையாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி அமைந்துள்ள பகுதியில் 3 பாடசாலைகள், 3 தேவாலயங்கள், 3 சைவ ஆலயங்கள் மற் றும் சுவட்டுறவுச்சங்கங்கள் என்பன காணப்படுவதுடன் பெருமளவான மக்கள் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இம் மக்களும் தமது தேவை யின் நிமிர்த்தம் இவ் வீதியையே பயன் படுத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி 7 கிலோமீற்றர் நீளமான வீதியில் 100 மீற்றர் தூரம் 2014 ஆம் ஆண்டு செப்பனிடப்பட்டது. தற்போது சுமார் 200 மீற்றர் தூரம் செப்பனிடப்பட்டுக் கொண்டிருக்கின் றது.

மேற்படி வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரியது. வேறு யாரும் இதனைச்செப்பனிடமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய வீதி இவ்வாறு தான் திருத்தப் படுமாஎனமக்கள்கேள்விஎழுப்புகின் றனர்.

மேலும் அறத்திநகரில் அமைந்துள்ள காற்றாலைக்கு கனரக வாகனங்கள் செல்வதால் வீதி செப்பனிடப்படாததால் வீடுகளின் மதில்கள் சில சேதமடைய நேரிட்டுள்ளது. அதே வேளை வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் விபத்துக்களில் சிக்குவதற்குக்கூட வழியேற்படு கிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களின் நலன்கருதி ஆவன செய்ய வேண்டுமென அப்பகுதி பொது மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-3-29)



உலக வங்கி குழுவினர், துணுக்காய் வலய பாடசாலைகள், மாகாண தொழில்நுட்ப பயிற்சி கல்லூரி ஆகியவற்றுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்த போது... (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# சாரதிகளே! சட்டத்தை கடைப்பிடியுங்கள் இல்லாவிடின் நாடு சுடுகாடாகிப் போய்விடும்

## கடுமையாக எச்சரிக்கிறார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர்



(பனிக்கன்குளம்)

**சாரதிகள் அனைவரும் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும். இல்லையேல் நாடு சுடுகாடாகிவிடும். ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது. அசமந்தப்போக்கில் வாகனத்தை செலுத்தும் சாரதிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

முழுங்காவில் பேருந்து நிலையத் திறப்பு விழா கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளர்.

அவர் தனது உரையில்,

எந்த ஒரு விடயத்தை நாம் செய்வதானாலும் சட்டத்தைக் கடைப்பிடித்தே செய்ய வேண்டும். ஒரு நாட்டில் ஒரு நிமிடம் சட்டம் செயலிழக்குமானால் அந்த நாட்டின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளும் தலைகீழாகும் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆகவே ஒரு நாட்டின் சகல துறையினரும் அந்தந்த துறைசார்ந்த சட்டங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். எனவே இதுதொடர்பில் சாரதிகள் மிகவும் அவதானமாக ஒவ்வொரு வீதி சமிக்ஞைகளையும் கடைப்பிடித்து வீதியில் செல்லும் ஏனைய பொது மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். எமது மாகாணத்தில் கடந்த ஆண்டு இயற்கை மரணத்தைவிடவும் வீதி விபத்துக்களாலேயே அதிக மரணம் சம்பவித்துள்ளதாக தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்கு பெருமளவில் சாரதிகளின் அசமந்தப் போக்கே பிரதான காரணமாகவும் காணப்படுகின்றது.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் தனியார் பேருந்துகளுக்கும் இடையில் காணப்படும் போட்டித்தனமையால் வீதிகளில் போட்டியிட்டு சமாந்தரமாக செல்வதை காணமுடிகின்றது.

இந்தப் போட்டித்தன்மை வீதியில் சென்றுகொண்டிருக்கும் பொதுமக்களினதும், பேருந்துகளில் பயணம் செயயும் பயணிகளினதும் உயிர்களையே அநியாயமாகக் காவுகொள்ளும் சந்தர்ப்பங்களை தோற்றுவிக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் இடம்பெற்ற விபத்திலும் பாடசாலைக்கு சிட்டாய் சென்று வீட்டுகது உயிரின்றி கொண்டு செல்லப்பட்ட சிறுவன் சுவஸ்திகனுக்கு ஏற்பட்ட விபரீதத்திற்கு பேருந்து சாரதிகளின் போட்டித்தன்மையே பிரதான காரணமாக இருக்கின்றது.

ஒரு உயிர் போனபின்பு சிந்திக்காமல் முன்னரே சிந்தித்திருந்தால் அந்த சிறுவன் இன்று உயிரோடு இருந்திருப்பான். இன்று அந்த சின்னஞ் சிறுவனை பறிகொடுத்துவிட்டு அந்தப் பெற்றோர் படும் அளவற்ற துன்பத்துக்கு யார் ஆறுதல் கூற முடியும்,

சாரதிகளே! உங்களுடைய குழந்தைகளுக்கு இவ்வாறு ஓர் நிலை ஏற்பட்டால் உங்களால் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? சிந்தியுங்கள்...

அந்த சாரதி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்காலம் முடிந்து வீடு திரும்பி விடுவார். ஆனால் சென்ற அந்தச் சிறுவனின் உயிர் மீண்டும் வருமா? சாரதிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.


ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது. அதனை பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். இவ்வாறு அசமந்தப்போக்கில் வாகனத்தை செலுத்தும் சாரதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைக்குட்படுத்தப்படவேண்டும்.

இந்த விடயத்தில் சட்டத்தை அமுல்படுத்தும் பொலிஸாரும், நீதித்துறையும் மிகவும் சரியான முறையில் இவர்களுக்கு தண்டனைகளை வழங்கும் பட்சத்திலேயே இவ்வாறான விபத்துக்களை இனிவரும் காலங்களில் குறைத்து உயிர்களைக் காக்கமுடியும்.

இதுவரை நாம் விபத்துக்களில் இழந்த உயிர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால், சம்பந்தப்பட்ட இரண்டு போக்குவரத்துத் தரப்பினரும் எதிர்காலத்தில் சட்டத்தை வலுவாகக் கடைப்பிடித்து விபத்துக்களைக் கட்டுப்படுத்தவேண்டும். எதிர்வரும் காலத்தில் எமது மாகாணத்தில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்தை வழங்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை சரியான முறையில் பின்பற்ற அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்

அவ்வாறு அமுல்படுத்தப்படும் ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காத சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் எச்சரித்தார். (2-3-281)



கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் பங்குகொள்ளும் மரதன் ஓட்டப்போட்டியாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனை பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது...
(படம்:-சிவநகர் செய்தியாளர்)

# விசுவமடுவில் பெருமளவு ஆயுதங்கள் தேடுதல் வேட்டையில் இராணுவத்தினர்

## எதுவும் கிடைக்காத நிலையில் கைவிடப்பட்டது

விசுவமடு றெட்பானா சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னங்காணியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கடந்தகாலங்களில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் என்பன புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பெருமளவான இராணுவத்தினர் ஆயுதங்கள் தேடும் கருவிகள் சகிதம் நேற்றையதினம் அவ்விடத்திற்கு சென்று தேடும் நடவடிக்கையில் பல மணி நேரம் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் பக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அகழ்வு நடவடிக்கையும் நடைபெற்றது. எனினும்எதுவிதமானபொருட்களும் கண்டெடுக்கப்படாத நிலையில் தேடும்நடவடிக்கைநிறுத்தப்பட்டது. இந்தநடவடிக்கையில்இராணுவ உயரதிகாரிகள் பெருமளவில் பங்கேற்றிருந்தனர்.

கடந்த காலங்களில் குறித்த காணியில் விடுதலைப் புலிகள்முகாம்ஒன்றைஅமைத்து அங்கு இருந்ததாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (2-3-295)

# மன்னார் புதுக்குடியிருப்பில் காணி அபகரிப்பில் ஈடுபடும் தனிநபர்கள்

## மீட்டுத்தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார்நானாட்டான்பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட புதுக குடியிருப்பு, சூரிய கட்டைக் காடு கிராமத்தில் காணிகள் உரிய முறையில் எல்லையிடப்பட்டுள்ளதா? என பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவரும் வருகைதந்து பார்வையிடவில்லை என அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அக்கிராம மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

நானாட்டான்- புதுக்குடியிருப்பு கிராமத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி எல்லைக் கற்கள் நாட்டப்பட்ட இடங்களை நில அளவைகள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்.

குறித்த எல்லைக் கற்கள் சரியான முறையில் போடப்பட்டுள்ளதாக வருகை தந்தவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

எனினும் குறித்த காணிகளை உரிய அதிகாரிகள் வந்து பார்வையிடவில்லை என்பது எமக்கு வேதனையளிக்கின்றது.

கடந்த 1989 ஆம் ஆண்டளவில் தனி நபர்களுக்கு அக் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் (போமிற்) அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர், அவர்கள் பராமரிப்பு செய்த காணிகள் எனக்கூறி இக் கிராம மக்கள் குடியிருந்த மேட்டு நிலக் காணிகளை உரிமை கோரி வருகின்றனர்.

இந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்ற நிலையில் தனிநபர்கள் நான்கு பேர் இக்காணிகளில் மண் அகழ்வு மேற்கொண்டு தற்போது ஏக்கர் கணக்கில் வயற் காணிகளாக ஆக்கியுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களின் காணிகளை தங்களுடையது என உரிமை கோரி வருகின்றனர்.

ஆனால் இக் கிராமத்தில் திட்டமிட்ட ஒரு காணி அபகரிப்பே நடந்தேறியுள்ளதாகவும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்ற நிலையில் எவ்வாறு இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அக் கிராம மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

தற்போது இக் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு குடியமர 20 பேர்ச் காணிகள் கூட இல்லாத நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, இக் கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு இக்கிராம மக்களுக்கு உரிய காணிகளை மீட்டுத் தருமாறு புதுக்குடியிருப்பு, சூரிய கட்டைக்காடு கிராம மக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-281)





கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி வேதஸ்தானத்தின் கல்யாண மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டல் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. ஆலய உப தலைவர் க.கடம்பசீலன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். இதில் கிளிநொச்சி மாவட்ட செயலகம், கரைச்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் கலாசார உத்தியோகத்தர்கள், ஆலய பக்தர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
09.11.1958



மறைவு
16.02.2013



## அமரர் திருமதி இரஞ்சினி மாதவன்

ஆண்டுகள் மூன்று ஓடி
மறைந்தாலும் உங்கள் அன்பு
முகம் எங்கள் நினைவுகளில்
நின்று மறையவில்லை.
நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்கள்
ஆகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்து மீண்டெழ
முடியவில்லை எங்களால்
உங்கள் ஆத்மா சாந்தி
யடைய மட்டுவில் பன்றித்
தலைச்சி கண்ணகி அம்மன்
பாதங்களைத் தரிசிக்கின்
றோம்.

**உங்கள் பிரிவால் வாடும்**
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.**



(3523)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—80

## நுண்ணங்கிகளும் பயன்படுத்தாத தாவரங்களும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உற வுகளே!

தாவர ராஜ்ஜியத்தில் உள்ள அநேகமான தாவரங்கள் அனை த்தும் மனிதனுடைய தேவைக்கு ஏதோவொரு வகையில் பயன் படுத்தப்படுகின்றன. ஆனால் குறிப்பிட்ட தாவரங்களின் பாக ங்களை மட்டுமே வளர்த்து நாம் எமக்கு தேவையான வரையில் பயன்படுத்துகின்றோம். இதில் அநேகமான தாவரங்களின் பாக ங்கள் மனிதனுடைய தேவை கட்கு பயன்படுத்தப்படுவதில்லை. எமக்கிருக்கின்ற வளங்களில் தாவர வளம் முதன்மையானது. இதனை அழகாக மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் புல் லாகிப் பூண்டாகி புழுவாகி வல் லசுரராகி முனிவராய் தேவராய் என சிறப்பாக வெளியிட்டிருக் கின்றார்கள். தாவரங்கள் எமக்கு இயற்கை தந்த வரங்களிலொன்று.

நாம் வாழும் இந்த மண் இய ற்கை எமக்குத் தந்த பொக்கி ஷமே. கண்ணுக்கு தெரிவதை வைத்துக் கொண்டு மட்டும் நாம் விவசாயம் செய்வது நீண்டநாள் நின்று பிடிக்காது. ஏனெனில் தாவ ரம் ஒன்றிற்கு நிலத்திற்கு மேல் உள்ள பாகங்களை விட நிலத் தின் கீழுள்ள பாகங்கள் அதிலும் வேர்த்தொகுதி முக்கியமானதாகும்.

களின் செயற்பாட்டுக்கு தேவை யாக காபன் மண்ணில் காணப் படுவதற்கு முக்கிய பங்குவகிப் பது அதில் காணப்படும் சேத னப்பொருளின் அளவு ஆகும். இங்கே சேதனப்பொருளென்பது விளைநிலத்திற்கு நாம் இடுகி ன்ற கூட்டுரமும் மற்றும் சேதன பசளைகளாக இடப்படும் பசுந் தாள் பசளைகள் மற்றும் பசுந் தாள் இலைப்பசளைகளாகும். இவ்வாறான இயற்கையாக கிடைக்கும் பசளை களை மண்ணில் இடும்போது இச்சேதன பச ளைகளை உண

பயன்படுத் தாத எருக்கலை, பூவரசு, பன்னை, கிளிறிசிடியா, பனையோலை என் பனவற்றை மண்ணினுள் இடுவத னால் மண்ணிலுள்ள நோயாக் கிகளை நெமற்றோட்டுகளை கட் டுப்படுத்தும் செயன்முறையை காணலாம். மண்ணினுள் நோயாக் கியாக இருக்கும் குறிப்பிட்ட நோயா க்கி பூஞ்சணாங்களான ஸ்கிளி ரோட் டியம் மற்றும் றைசொக்ரோ னியா எனப்படுவன தாவரத்தின் வேர்ப் பகுதியை தாக்குவதுடன் அழுகல டையச் செய்வதனால் தாவரத்தை

வைத்திருக்க உதவும்.

சேதன விவசாய செய்கையில் காபன் வட்டத்தின் முக்கியத்துவம் முழுவதுமாக உணரப்பட்டிருக் கின்ற நிலையில் இவ்வாறான காபனை மண்ணினுள் தாவரத்தி ற்கு தேவையான மூலக்கூறாக வைத்திருப்பதற்காக சேதனப் பொருட்களை ஒட்சிசன் குறைவான நிலையில் எரித்து உயிர்க்கரி ஆக மாற்றுவதாகும். இதனை ஆங்கி லத்தில் பைறோலை சிசு எனப் படும். இதனால் உயிர்க்கரியினுள் துளைகளினளவு அதிகரிக்கப்படு



செயன்முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் மண்ணின் வளத்தை மேலும் கூட்டுவதற்கு உறுதுணையாயுமி ருக்கும்.

இவற்றை ஒருமித்து பார்த்தால் சேதன விவசாய செய்கையினை முனனெடுப்பதற்கும் அதனை ஊக்கு விப்பதற்கும் நாம் பயன படுத்தாத தாவரங்களினை பயன் படுத்தும் வழிவகைகள் இருக்கி ன்றது என்பதனை அனைவரும் உணர்வீர்கள். சேதன விவசாய செய்கைக்கு தேவையான அனை த்து எளிய மற்றும் உள்ளூர் தொழில்நுட்பங்களையும் ஒன் றிணைத்தால் விவசாய பெரு மக்களை இதனுள் முழுமை யாக ஈடுபட வைக்கலாம். நஞ்ச

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 77

மண்ணினை வளமானதாக வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். மண் ணென்பது ஒரு கூட்டுத் தொகுதி யாகும். அதனுள் உயிரியல் மற் றும் பௌதீக காரணிகளின் தொழிற்பாடு நடந்து கொண்டிருக் கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு உயிரியல் காரணிகளின் இயக் கம் அதிகரித்துக் காணப்படுகின் றதோ அவ்வளவிற்கு மண்ணின் வளமும் அதிகரித்து காணப்ப டும்.


வளமான மண் என்பது நன் மை தரும் நுண்ணங்கிகளின் செயற் பாடு அதிகமாக காணப்படுகன்ற மண்ணாகும். நன்மை தரும் நுண்ணங்கிகளின் எண்ணி க்கை அதிகமாக இருக்கும் போது மண்ணினுள் உள்ள உயிரிக ளின் செயற்பாடு அதிகரித்துக் காணப்படும். இவ்வாறான நன்மை தரும் நுண்ணங்கிளின் செயற் பாட்டின் மூலமாக தாவரத்திற்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்க முடியும். நுண்ணாங் வாக்கும் நன்மை தருகின்ற நுண் ணாங்கிகளின் பெருக்கம் அதிகரிப் பதுடன் மண்ணினுள் தேவை யான ஊட்டச்சத் தினளவும் அதிக ரிக்கும். மேற் கூறிய நிலைக்கு விளைநிலத்தின் தன்மையை அதிகரப்பதற்கும் அதிலுள்ள நன்மை தருகின்ற நுண்ணாங்கிகளை அதிகரிக்க செய்வதற்கும் பயிர்ச் செய்கையில் நம்மவர்களால் இடப் படும் கூட் டுரத்திற்கும் மேலதி கமாக பசுந் தாள் இலைகள் மற்றும் பசுந்தாள் இலைப் பசளைகளை இடுவது வழக்கமாக இருக்கின்றது. இங்கே இடப்படும் இவ்வாறான பசுந்தாள் மற்றும் பசுந்தாள் இலைப் பசளை கள் உக்கி பிரிவடையும் போது நுண்ணாங்கிகளுக்கான உணவாக வும் அதிலுள்ள ஊட்டச் சத்துக்கள் தாவரம் இலகுவில் அகத்துறிஞ்சத் தக்கதாகவும் மாறி விடுகின்றன. பசுந்தாள் இலைப் பசளைகளா னவை வேறிடத்தில் வளர்ந்த தாவரங்களின் இலை களை பிரித்தெடுத்து விளைநிலத் தினுள் இடுவதாகும்.

இங்கே நாம் அதிகம் முழுமையாக விளை ச்சல் தருகின் றதாக மாற்றிவிட முடியாது. இந் நோயாக்கிகளை பசுந்தாள் இலைப் பசளைகளை இடுவதன் மூலமாக அவற்றை வலுவிழக்கவோ அல் லது நோயை ஏற்படுத்துகின்ற தன் மையை குறைக்கவோ முடியும். வேப்ப மிலை இதற்கு சிறந்த உதார ணமாக விவசாய உயிரியல் துறை யில் அதன் சிறப்பு பிரிவு மாணவி ரோகினி சிவஞானபானு செய்த ஆய்வின் மூலம் உணர்த்தப்பட் டிருக்கின்றது. வேப்பமிலையைத் தொடர்ந்து பனையோலை மற்றும் எருக்கலை என்பன சிறந்த முறை யில் ஸ்கிளிரோட்டியம் மற்றும் பியூசேரியம் பூஞ்சணங்களை கட்டுப்படுத்துவனவாக அமைந் துள்ளன. பசுந்தாள் பசளைகள் அதிகமாக இடப்படும் போது மண் ணினுள்ள ஊட்டச்சத்தினளவு அதிகரிக்கின்ற தன்மையும் அத னுடன் சேர்ந்து மண்ணில் உள்ள நுண்ணாங்கிகளின் உயிர்ப்புத் தன்மையும் அதிகரிக்கின்றது. இது மண்ணினை உயிர்ப்புடனாக கின்ற தன்மையும் அதனுள் பல் வேறு வகையான நுண்ணங்கிகள் தங்கியிருந்து தமது பிரிந்தழிதலை செய்வதற்கான வாய்ப்பும் கிடை க்கப் பெறுகின்றது. மண்ணின் விளைவிக்கும் தன்மையை அதிக ரிக்க செய்வதற்கு இவ்வாறான செயன்முறை பெரிதும் கைகொ டுக்கும். இந்த தொழில்நுட்பம் ஆதிகாலத்திலிருந்தே எம்மவர்க ளினால் கடைப்பிடிக்கப்பட்டதென் றாலும் அதற்குரிய விஞ்ஞான விளக்கம் தற்போது கொடுக்கப்படும் போது இன்னும் இச் செயன் முறை யில் நன்மைகளை நாம் அனை வரும் உணரமுடிகின்றதல்லவா. தொன்று தொட்டு பயன்படுத்தப்பட்டு வந்த பாரம்பரிய விவசாயச் செயன் முறைகளுக்குள் பல விடயங்களை நாம் காணக் கூடியதாயிருக்கின் றது. கிடைக்கின்ற ஊட்டச்சத்தை வினைத்திறனாக பயன் படுத்துவ தற்காக தொழில்நுட்பமாக இதனை கருதக்கூடியதாக இருப்பதுடன் இவ்வாறான ற்ற உலகத்தை நாம் உரு வாக் குவதற்கு இன்னும் நிறை யவே பாடுபட வேண்டியிருக்கும். இயற் கையாக கிடைக்கும் தாவரங் களின் மீதிகளை மற்றும் தாவர பொருட்களை அதிகம் பயன் பாட்டிலில்லாது விடினும் இவ் வாறான உயர்க்கரியாக்குவதன் மூலம் தாவரத்தின் விளைச் சலை அதிகரிக்க முடியும்.

அதைவிட பயன்பாட்டிலில் லாத தாவரங்களுக்கு மருத்துவ குணங்கள் நிறையவே உண்டு. அவற்றை தெரிந்து கொண்டு இத்தா வரங்களையும் நாம் பயன்படுத்தும் போது இவற்றி லிருந்து நாம் அதிக பயன்களைப் பெற்றுக் கொள்ள லாம். மண்ணினுள் உரமாகி தாவரத்தை வளமாக்கும் சேதன பசளைகள் பற்றிய விழிப்புணர்வை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ள நிலையில் சேதன விவசாயத்தை ஊக்கு விக்கும் செயன்முறைக்குள் நாமும் முழுமையாக இறங்குதல் அவசியமாகின்றது.

# சமஷ்டி தீர்வு தடுக்கப்படுமாயின் பிரிவினைவாதம் மேலோங்கும்

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கருத்தறியும் அமர்வில் சுட்டிக்காட்டு







புதிய அரசியலமைப்பு தொடர்பாக கருத்தினையறியும் யோசனை குழு இரண்டு தினங்கள் மன்னாரில் பதிவுகளை மேற்கொண்டது

இதற்கமைய புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்களின் கருத்தினை அறியும் ஆலோசனை குழு கடந்த 10ஆம் திகதி புதன்கிழமையும் மறு நாள் வியாழக்கிழமையும் காலை அதன் பதிவுகளை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஜய்க்கா மண்டபத்தில் மேற்கொண்டது.

லால் விஜயநாயக்க தலைமையில் பதிவுகளை மேற்கொண்ட குழுவில வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா மற்றும் கலாநிதி விஜய சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொண் டனர்.

இரு தினங்கள் காலை 9:30 மணி முதல் மாலை 4:30 வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

101 பிரதிநிதிகள் தமது கருத்தி னை பதிவு செய்திருந்தனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நந்தினி ஸ்டான்லி டி மெல், உதவி மாவட்ட செயலாளர் பவாகரன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் நிரந்தர தீர்வு தொடர்பாக புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் சேர்க்கப்பட வேண்டிய ஆலோசனைகள்பெறுவது தொடர்பாக மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்திருந்த மக்கள் தமது கருத்தினை குழு முன்னிலையில் பதிவுசெய்தனர்.

இதேவேளை மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் அரசியல் யாப்பு சம்பந்தமாக பல கருத்துக்கள்முன்வைக்கப்பட்டன.

அதனை வி.எஸ். சிவகரனுடன் இணைந்து மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் விக்டர்சோசை, ஆயர் இல்லத்தின் செயலாளர் அருட்தந்தை ஏ.முரளிதரன், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை உள்ளிட்ட அருட்தந்தையர்கள் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து அது தொடர்பான விபரம் அடங்கிய ஆவணம் கருத்தினை பதிவு செய்யும் குழுவின தலைவரிடம் வழங்கப்பட்டது.

குறித்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் பின்வருமாறு,

**அரசின் நிலையியல்**

சுயநிர்ணய உரிமையுடைய தன்னாதிக்க இறைமை கொண்ட மாநில வாரியங்களின் கூட்டமைவு (சமஷ்டி)

**அரசாங்கத்தின் கட்டமைப்பு**

பிரித்தானியாவில் உள்ள வெஸ்மினிஸ்ரர் முறைமை போல் இரு அவைகளைக் கொண்டதாகவும் அதாவது பாராளுமன்ற கட்டமைப்பில் பொதுமக்கள் பிரதிநிதிகள் சபையும் மாநிலங்களின் ரீதியான சபையும் உதாரணம்: 10ம் மக்களவை, மாநிலங்களவை ஜனாதிபதி அரசாங்கத்திற்கு தலைவராக இருப்பார்.

**அரசியல் அமைப்பின் அடிப்படைக் கோர்ப்பு**

ஒழுங்கு முறையாக நிறை நிலைப்படுத்தப்பட்டதாக யாப்பு அமைந்திருத்தல் அவசியம், நீதி நிர்வாகம் கருத்துரைப்பு ஆகியவை சுயாதீனம் கொண்டவையாக அமைதல் அவசியம், பாராளுமன்ற ஜனநாயகத்தில் உச்ச வரவேற்பு பெற்றிருத்தல், பல்லின சமய, சமூக மொழித்துவ முரண்பாட்டை சமப்படுத்துபவையாக அமையப்பெறல்,இனத்துவ ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும சமநிலை பேணுதல் அவசியம், சமச்சீர் கட்டமைப்பில்உள்ளக வெளியக முரணபாடு தோன்றின் நீதிப் பரிபாலனத்தினூடாக நிர்ணயபபடுத்திக் கொள்ளல், மாநில தனித்துவ தத்துவார்த்தத்தைஏற்புடையாக்குதல், சிங்களம தமிழ் அரச கரும மொழியாக இருத்தல அவசியம்

**மாநில நிர்வாக முறைமைகள**

நாட்டின் அரசியல் அமைப்பை மீறாத வகையில் சட்ட உருவாக்கல் தன்மையைக் கொண்டிருத்தல் காணி, பொலிஸ் அதிகாரத்துடன், மாநில வாரியான சுய சமூக மொழிததுவத்திற்கு அமைவாக குறித்த ஒவ்வொரு இனக்குழுமத்திற்கும் அடிப்படையில் எந்தவிதமான பாதிப்பும் நிகழாத வகையில் அவர்களது பண்பாட்டியலை வழி சமைத்து வாழ்வியல் இடர்கள் ஏற்படாவண்ணம் சிறுகுழுமம் தொடக்கம் பன்முகம் வரை அவரவர் நிலையியலுக்கு ஏற்ற வலுவேறாக்கல் கட்டமைப்புக்களை நிலையான நிர்ணயத்துடன் ஸ்திரப்படுத்திக் கொள்ளுதல் ஒவ்வொரு மாநிலத்தினதும் தார்மீக பொறுப்பேற்றலாக விதிக்கப்படல் வேண்டும்.

**சட்டவாக்கச் சபை**

இரண்டு அவைகளைக் கொண்டதாகக் காணப்பட வேண்டும், மக்களவை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும், மாநிலங்களவை - மாநில ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய முறையில் அதிகம் துறைசார்ந்த புத்திஜீவிகள் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது ஆகும்.

**பாராளுமன்றின் செயற்பாடு**

பாராளுமன்றம் உயர்நிலையைக் கொண்டிருந்தாலும் பொது மக்கள் அபிப்பிராயத்தின் அடிப்படையில் அரசியலமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். அத்துடன் அரசியல யாப்பிற்கும் அதன் அதிகாரத்திற்கும் குந்தகம் ஏற்படாத வண்ணம் பாராளுமன்ற நிலையியல் கொண்டிருக்க வேண்டும்,ஒரு நாட்டின் அடிப்படை அரசியல அமைபபே அதனை அவ்வப்போது குறிப்பிட்ட கால இடை வெளிக்குள் மீள் திருத்தங்கள் செய்வது ஜனநாயக மரபுக்கு ஏற்புடையது அல்ல. உதாரணம்:- அமெரிக்கா.

ஆட்சியாளர்களின் சுய விருப்பங்களின் அடிப்படையில் மாநில இறையாண்மைகது குந்தகம் விளைவித்தல் முறையல்ல.

**அதிகாரப் பகிர்வு**

தேசிய பாதுகாப்பு சர்வதேச தொடர்பு, சர்வதேச கடல் நியமம், நெடுந்தூர போக்குவரவு, ஆகாய மார்க்கம் இவை தவிர்ந்த ஏனையவை மாநில அரசுகளுடன் அதிகாரபபகிர்வும் சில துறைகளில் அதிகாரப் பரவலாக்கமும் அதாவது சில துறைகளில் மத்தியும் மாநிலமும் இணைந்து செயறபடுதல் வேண்டும். ஆனால் மாநில தன்னதிகாரத்தில் மத்தி தலையிடுதல் அவசியமற்றது என குறிப்பிடல் வேண்டும்.

**நீதிப் பரிபாலனம்**

ஒவ்வொரு மாநிலத்திலும் உயர நீதிமன்றங்கள் அமைக்கப்படல் வேண்டும். அவை சுயாதீனமாக செயற்படுவதற்கும்அரசியல் சார்பில்லாத ஆணைக்குழுக்கள் மூலம் பணிநிரப்புக்கள்மேற்கொள்ளுதல்வேண்டும்.

இதில் அரசியல் அமைப்பு நீதிமன்றமும் நிறுவப்படுதல் வேண்டும்.ஏனெனில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழி வகுக்கும்.

**சுயாதீன ஆணைக்குழுக்கள்**

அரசியல் யாப்பு நிர்ணயத்தில் அடிப்படையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் சகல துறைகளுக்கும் மத்திய சட்டவாக்க பிரதிநிதிகளையும் உள்ளடக்கி கட்சி அரசியல் கடந்து ஜனநாயக மரபு பண்புசார் நெறிமுறைகளுடன் அதன் நிலையியலை நேர்மையாக கையாளக் கூடியவர்களை உள்ளடக்கிய முறையில் இன விகிதாசாரத்திற்கு அமையவும் சிறந்த புத்திஜீவிகளையும் உள்ளடக்குதல் அவசியமாகும்.

**தேர்தல் சீர்திருத்தம்**

பல்லின சமூகத்தைக் கொண்ட ஒரு நாடாக காணப்படுவதால் பொது மக்களின் வாழ்வியல் செறிவுக்கு அமைவாக இன விகிதாசாரம் மற்றும் தொகுதிவாரியான தேர்தல் முறைமையும்உள்ளீர்க்கப்பட்டுகலப்பு முறைமை உருவாக்கப்படுதல் வேண்டும்.

பெண்களிற்கு பாராளு மன்றம் / மாநிலம்/ உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிவற்றிற்கு அதிக அங்கத்தவர்களை உள்ளீர்ப்பதற்கு ஒதுக்கப்பட வேண்டும்.

அவ்வாறே இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட திறன் நிபுணத்துவமுடையவர்களிற்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும்,

தேர்தலில் இனவாதம் மத வாதம் பிரயோகிப்பது அரசியலமைப்பு ரீதியாக தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட வேண்டும்,

சமூக முறைமைக்கு மாறாக செயலாற்றுபவர்களை மீளழைக்கும் முறை உருவாக்கப்பட வேண்டும். அதாவது அதிகார வலுவிழப்பு முறை ஏற்படுத்த வேண்டும், மக்கள்பிரதிநிதிகளுக்கான ஒழுக்கக் கோவை உருவாக்குதல் வேண்டும். வசிப்புரிமை, கல்வித் தகைமை, இலஞ்ச ஊழல், பாலியல் குற்றச்சாட்டு அதிகார துஷ்பிரயோகம் போன்றவை இல்லாதிருப்பவர்களாக இருக்க வேண்டும்,

**ஜனாதிபதி**

பாராளுமன்ற முறைமையின் கீழ் செயலாற்றுதல் வேண்டும். சம்பிர தாய பூர்வமான ஜனாதிபதியாக பணியாற்றுதல் வேண்டும். உதாரணமாக இந்திய குடியரசின் ஜனாதிபதி முறைமைக்கு ஒப்பானதாகும். சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை முழுமையாக அகற்றப்பட வேண்டும்,

பிரதமர் மற்றும் அமைச்சரவையே மாநில அரசுகளுடன் கூட்டுறவு நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும்.

**சிறப்பு அம்சம்**

தமிழர் தாயகத்தின் எதிர்காலம்

கடந்த ஆறு தசாப்தத்திற்கு மேற்பட்ட இனமுரண்பாட்டுசமத்துவமின்மை ஜனநாயக அத்துமீறல் அடக்கி ஆளும் மேட்டிமைத்தனம் எதேச்சதிகார ஏகாதிபத்தியம் சிங்கள பௌத்த நாடு எனும் மேட்டிமைத் தனம் எனும் வாதங்கள் உருவூட்டப்பட்டதன் விளைவே பல இலட்சககணக்கான உயிரிழப்புக்களுக்கு காரணமாக அமைந்தது. பல ஒப்பந்தங்கள் காணாமல் போகச் செய்யப்பட்டன. வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. அதனால் நம்பிக்கையற்றவர்களாகி விட்ட நிலையே காணப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் ஐக்கிய இலங்கைக்குள் சமச்சீரான அதிகாரப் பரவலாக்க முறையினூடாக எங்களை நாங்கள் ஆளுகிறவர்களாக வட கிழக்கு தாயகம், தேசியம்,தன்னாட்சி, சுயநிர்ணயம் ஆகிய உரிமைகள் தன்னகத்தே கொண்ட சிறப்பதிகார அலகுபூரணசமஷ்டி அதிகார முறைமை உதாரணமாக சுவிஸ், கொசோவா போன்ற நாடு களில் உள்ள நிர்வாகக் கட்டமைப்புப் போல் வரன் நெறிமுறை நீதி தவறினால் இணைந்து வாழ்தல் என்பதற்கு குந்தகம் ஏற்படும்.எனவே சுதந்திர வாழ்வுரிமைக்காகப் போராடிய இனம் சமஷ்டி கோருவது எந்த வகையிலும் தவறாக முடியாது.

ஆகவே வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு வடகிழக்கு தமிழ் மாநில அரசாக்கப்பட்டு அங்கு வாழும் முஸ்லிமகளுக்கும் சிங்களவர்களுக்கும் இணையான அதிகார பங்கீடு வழங்குவதுடன் அவர்களது தனித்துவ நிர்ணயியலையும் உள்ளத்துக்கொள்வது அவசியமாகும்

அத்துடன் இந்தியாவின் காஷமீர் மாநிலத்திற்கு இந்திய மத்திய அரசாங்கம் சிறப்பு அந்தஸ்து வழங்கியது போல் வடகிழக்கு பகுதிக்கும் வழங் குவதுடன் இல்லையேல் பிரித்தானிய ஆதிக்கத்தில் உள்ள ஸ்கொட்லாந்திற்கு உள்ள தனித்து இராச்சிய அங்கீகாரத்தையாவது வழங்க வேண்டும்.

எனவே சிங்கள மக்கள் சமஷ்டி முறையில் அரசியல் யாப்பு உருவாககத்தை தடுப்பார்களாயின் மறுபடியும பிரிவினைவாதம் மேலெழக் கூடிய ஏதுவான நிலை தோன்றலாம்.(2-3-281)

## காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு

# ஸ்ரீநகர்-ஜம்மு நெடுஞ்சாலை இரண்டாவது நாளாக மூடல்



(டில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் நிகழ்ந்து வரும் கடும் பனிப்பொழிவு மற்றும் நிலச்சரிவு காரணமாக அம்மா நிலத்தின் லடாக் பகுதியை காஷ்மீருடன் இணைக்கும் 300 கிலோ மீற்றர் நீளமுள்ள ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலை தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் மூடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் கடந்த பத்து நாட்களாக பொழிந்துவரும் தொடர் பனியால் தலைநகர் ஸ்ரீநகரில் வீதிகளில் பனி உறைந்து கிடக்கிறது. வீடுகளின் கூரைகள், மரங்கள் வெள்ளை போர்வையை போர்த்தியது போல் பனிப்பொழிவால் மூடிக்கிடக்கின்றன.

மாநிலத்தின் பல பகுதிகளில் பரவலாக பனிப்பொழிவு காணப்படுகிறது. ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலையில் பனிக்கட்டிகள் உறைந்துள்ளதால், வாகனங்களின் டயர்கள் சறுக்கி விபத்து ஏற்படுவதை தவிர்க்கவும், பனிப்பொழிவின் விளைவாக வீதியோரங்களில் மீண்டும் பனிச்சரிவு ஏற்படலாம் என்ற அச்சத்தாலும் 300 கிலோமீற்றர் நீளமுள்ள ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்லும் போக்குவரத்து நிறுத்தப்பட்டு நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

இதே காரணத்தால் 434 கிலோ மீற்றர் நீளமுள்ள ஸ்ரீநகர்-லே நெடுஞ்சாலை கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து மூடப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்புமிக்க மொகல சாலை உள்ளிட்ட பல முக்கிய சாலைகளும் மூடப்பட்டு போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேபோல், உள்ளூர் வீதிகள் மற்றும் சுரங்கப் பாதைகளையும் பனி மூடியுள்ளதால் உள்ளூர் போக்குவரத்தும் கடுமையான பாதிபபுக்குள்ளாகி மக்கள் சிரமப்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. (இ)

# சிறையில் கலவரம்

## 52 பேர் பலி!

(மான்டெர்ரி.)

**சிறைச்சாலையில் அதிகாலை வேளை கைதிகளுக்கு இடையே திடீரென மூண்ட மோதல் கலவரமாக மாறியதில் கைதிகள், பொலிஸார் உட்பட 52 பேர் உயிரிழந்துள்ளனர்.**





மெக்சிகோவின் வடக்கு பகுதியில் உள்ள மான்டெர்ரி நகரில் சிறைச்சாலை ஒன்று உள்ளது. இங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த சிறையில் நேற்று முன்தினம் அதிகாலை சுமார் ஒரு மணியளவில் திடீரென கைதிகளுக்கு இடையே பயங்கர கலவரம் மூண்டது.

கைதிகள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதுடன், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளையும் சரமாரியாக தாக்கினர். இந்த பயங்கர கலவரத்தில் பொலிஸார் உட்பட 52 பேர் பலியாகினர். மேலும் 12க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த கலவரத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் எதுவும் தெரிவிக்காத நிலையில், சிறையில் இருந்து கைதிகள் சிலர் தப்பிக்க முயன்ற போது ஏற்பட்ட வன்முறையே இந்த கலவரத்துக்கு காரணம் என சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே கலவரம் குறித்து அறிந்ததும், அந்த சிறையில் அடைக்கப்பட்டு உள்ள கைதிகளின் உறவினர்கள் சிறைக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. (இ)

# சவுதியில் ஆறு ஆசிரியர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொலை

## சக ஆசிரியரின் வெறிச்செயல்

(றியால்)

சவுதி அரேபியாவில் பாடசாலைக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த ஆசிரியர் ஒருவர் தன்னுடன் பணியாற்றிய 6 சக ஆசிரியர்களை சுட்டுக்கொன்றுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சவுதி ஜாசன் மாகாணத்தில் உள்ள Al-Dayer நகரில் உள்ள பாடசாலை அலுவலகத்திற்குள் நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கி ஆசிரியர் ஒருவர் நுழைந்துள்ளார்.

பின்னர், கண் இமைக்கும் நேரத்தில் அலுவலகத்தில் இருந்த அதிகாரிகளை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளார்.

இதில், 6 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 4 பேருக்கு பலத்த குண்டு காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சவுதியின் உள்துறை அமைச்சரான மான்சூர் துர்கி இந்த தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், தாக்குதல் நடத்திய ஆண் ஆசிரியரை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கான அதிகாரபூர்வமான காரணங்கள் வெளியாகாத நிலையில், பாடசாலையின் அதிபர் மீது தாக்குதல் நடத்திய ஆசிரியருக்கு முன் விரோதம் இருந்ததாகவும் அல்லது அவர் மனநல நோயால் பாதிக்கப்பட்டவராக இருககலாம் என சவுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# நல்லிணக்கம் மற்றும் ஆலோசனைக்கான இணையத்தளம் யாழில் அறிமுகப்படுத்தல்


## அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்பு

நல்லிணக்கம் மற்றும் ஆலோசனைக்கான இணையத்தளம் அறிமுகப்படுத்தலும் அது தொடர்பாக சிவில் சமூகத்தினரின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வும் நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சில்பணி யாற்றும் டானியல் அல்போன்சஸ் கருத்தறியும் வழிமுறைகள் பற்றிய விளக்கத்தை வழங்கியிருந்தார். அதனை தொடர்ந்துநல்லிணக்கம் மற்றும்ஆலோசனைக்கான இணையத் தளம் அறிமுகப்படுத்தும் நிகழ்வும் நடைபெற்றது. பின் குறித்த இணையத்தளம் தொடர்பாக சிவில் சமூகத்தினரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது

இந்தநிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன கெட்டியாராட்சி,யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சமாதான செயல்முறை இணைய செயலகத்தின் சிவில் சமூகத்துக்கான குழுவின் இணைத்தலைவர் திருமதி முற்றோருவேகம, கருத்தறியும் செயலணியின் செயலாளர் பாக்கியசோதிசரவணமுத்து, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் சிரேஷ்ட நிர்வாக சேவைஅலுவலருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ,பாதுகாப்புபடை அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)










(படங்கள்:-பொ.சோபிகா)

## விண்வெளிப் பாதையில்

# ஈர்ப்பு விசை அலைகளை கண்டுபிடித்து புதிய சாதனை படைத்த விஞ்ஞானிகள்



விண்வெளிப் பாதையில் உள்ள இரண்டு கரும்புள்ளிகள் அல்லது நட்சத்திரங்கள் இணைவதன் மூலம் புவியீர்ப்பு அலைகள் உருவாவதை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த கண்டுபிடிப்பின் மூலம் 100 ஆண்டுகளுக்கு முன் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் வகுத்த சார்பியல் கொள்கை உண்மை என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அறிவியல் கண்டுபிடிப்பாக கருதப்படும் இந்த ஆய்வில் பங்கு கொண்ட விஞ்ஞானிகளுக்கு உலகம் முழுவதிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

1915ஆம் ஆண்டு ஈர்ப்பு விசை குறித்த சார்பியல் தத்துவத்தை இயற்பியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் வகுத்தார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு கடந்த 50 ஆண்டுகளாக பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா மற்றும் இந்திய விஞ்ஞானிகள் கால வெளியில் இருக்கும் ஈர்ப்பு விசை குறித்த ஆய்வை மேற் கொண்டனர். நேற்று முன்தினம் இது குறித்து வோஷிங்டன் தேசிய பத்திரிகையாளர் சந்திப்பில் விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

அதில், விண்வெளிப் பாதையில் உள்ள இரண்டு கரும்புள்ளிகள் இணைவதன் மூலம் ஈர்ப்பு அலைகள் அல்லது சிற்றலைகள் தோன்றுகின்றன. இவைகள் அரை ஒளிவேகத்தில் ஒன்றுடன் ஒன்று இணைகின்றன என கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் பூமியில் இருந்து 1.5 பில்லியன் ஒளிஆண்டுகளுக்கு அப்பால் இந்த ஈர்ப்பு விசை இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்த புதிய கண்டுபிடிப்பின் மூலம் அண்டம் தோன்றிய விதம் குறித்து ஆய்வு மேற்கொள்ளவும், பிரபஞ்சத்தின் தோற்றத்தில் மறைந்துள்ள பல மர்மங்களை கண்டறியும் இது துணைநிற்கும் என கூறப்படுகிறது.

இதேபோல் செயற்கைகோள் ஆய்வுகளின் போது புவியில் இருந்து ஏற்படும் ஒலி போன்ற இடையூறுகளை கடந்த ஆய்வுகளை எளிதில் மேற்கொள்வதற்கும் இந்த ஈர்ப்பு அலைகள் பயன்படும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# இலங்கை தொடர்பான சீன நிலைப்பாட்டில் மாற்றம்

## முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன

இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டில் முழுமையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சீனா விரைவில் இலங்கையில் பாரிய முதலீடுகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர சீனாவுடனான உறவில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

எனினும் தற்போது அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரபல செய்தி சேவை ஒன்று தெரிவித்துள்ளது. அமைச்சர் ராஜித சேனாரட்னவை மேற்கோள் காட்டி இந்த செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மிகமுக்கிய முதலீடுகளில் 1.4 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டிலான கொழும்பு துறைமுக நகரம் முக்கியத்துவம் பெறுகிறது.

இதனை தவிர அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்தையும் சீனா மேற்கொள்ளவுள்ளது என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-12.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.02 | 146.02 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.69 | 211.92 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 159.55 | 165.87 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 144.80 | 150.80 |
| டொலர் | கனடா | 101.33 | 105.45 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.90 | 104.63 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.50 | 105.38 |
| ரூபா | இந்தியா | 2.1014 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.5378 |
| குவைத் | டினார் | 482.6329 |
| ஓமான் | ரியால் | 373.7245 |
| கட்டார் | ரியால் | 39.5197 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3669 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1775 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 | 70-100 | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 45 | 70 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 240 | 220 | 250 | 200 |
| தக்காளி | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 60 | 100 | 70 | 80 | 90 | 100 | 80 |
| கரட் | 250 | 200 | 200 | 240 | 200 | 300 | 200 |
| பூசணி | 100 | 100 | 70 | 60-100 | 50 | 100 | 60 |
| புடோல் | 60 | 40 | 30 | 70 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 40 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 70 | 60-100 | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 50 | 70 | 100 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 40 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | — | 80 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 160 | 140 | 100 | 120 | 120 | 120 | 150 |
| லீக்ஸ் | 80 | 150 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 60 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 240 | 240 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 700 | 600 | 500 | 1000 |
| போஞ்சி | 60 | 100 | 70 | 80 | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 70 | — | 80 | 80 | 60 |
| கீரை-1பிடி | 30 | 10 | 15 | 30 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 80 | 80 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-45 | 50 | 45 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 100 | 150 | 100 | 160 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 70 | 80 | 100 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 40 | 30 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | — | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைத் தமிழர்களுக்காக எம்.ஜி.ஆர் உண்ணாவிரதம் 104

உண்ணாவிரதம்

தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே பொது இடங்களில் அனைத்துக் கட்சியினரும் மற்றும் பொதுமக்களும் சேர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

அன்றைய தினம் இலங்கைத் தமிழர் அகதிகளின் நலவாழ்வு நிதிக்கான கொடி விற்பனைக்குத் தங்கள் பேராதரவைத் தருமாறு தமிழக மக்கள் அனைவரையும் இந்த அனைத்துக் கட்சி கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானத்தில் கூறப்பட்டு உள்ளது.

எம்.ஜி.ஆர். அறிக்கை

எம்.ஜி.ஆர். இதுபற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருந்ததாவது:-

இலங்கைத் தமிழர் நலத்திலும் நல்வாழ்விலும் தமிழ்நாட்டு மக்கள் கொண்ட பரிவும் பாசமும் அனைவரும் அறிந்துள்ளனர்.

அவர்கள் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஏற்பட்டு அவர்கள் மானத்தோடும் உரிமையோடும் வாழ நாம் அனைவரும் பல வகையிலும் முயன்று கொண்டே இருக்கிறோம்.

கொடுமை

திம்புவில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னும் இலங்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டு இருக்கிற கொடுமையான சம்பவங்கள் நம் மனதை வருத்துகின்றன.

இச்சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலும் இலங்கைத் தமிழ் உடன்பிறப்புகள் மீது நமக்குள்ள ஒருமித்த ஆதரவையும் உண்மையையும் வெளிக்காட்டும் வகையிலும் தமிழக மக்கள் அனைவரும் 24.09.1985 அன்று ஒரு நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உண்ணா நோன்பு இருப்பது என்று அனைத்துக் கட்சி தலைவர்கள் கூடி எடுத்த முடிவைத் தமிழக மக்கள் முன்வைக்க நான் விளைகிறேன்.

அழைப்பு

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் அன்று தத்தம் கட்சி சார்பாகத் தமிழகம் முழுவதும் அமைதியாகக் கூடி உண்ணா நோன்பு இருக்கவும் அதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்யவும் அனைத்துக் கட்சி தலைவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதனை நான் நேரில் விடுத்துள்ள அழைப்பாகவும் கருதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கலந்துகொள்கிறேன்

சென்னையில் அ.தி.மு.க சார்பில் நடைபெறும் உண்ணா நோன்பில் நான் கலந்து கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் தாங்களாகவோ தனிப்பட்ட முறையிலோ அல்லது அவரவர் சார்ந்துள்ள ஊழியர் சங்கங்கள் மூலமாகவோ உண்ணா நோன்பைக் கடைப்பிடிக்கலாம். பொது மக்கள் அனைவரும் ஆங்காங்கு நடைபெறும் உண்ணா நோன்பு கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிதி உதவி

அகதிகளாக வந்த வண்ணம் உள்ள இலங்கைத் தமிழ் குடும்பங்களின் மறு வாழ்வுக்கென இந்த உண்ணா நோன்பு நாளில் நம்மால் இயன்ற நிதி உதவியை நன்கொடையாக செலுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த நற்பணிக்குத் தாராளமான உதவ வேண்டும் என்று பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வெற்றி

நாம் கடைப்பிடிக்க இருக்கும் இந்த முழு வேலை நிறுத்தமும் உண்ணா நோன்பும் முழு வெற்றி பெற்று இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையையும் அவர்கள் மீது நமக்கு உள்ள ஆதரவையும் உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

இந்த முழு வேலை நிறுத்தமும் உண்ணா நோன்பும் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற அனைவரும் தங்கள் ஒருமித்த ஆதரவைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் எம்.ஜி.ஆர்.கூறியிருந்தார்.

இதன்படி தமிழ்நாடு முழுவதும் 24.09.1985 அன்று முழு அடைப்பும் உண்ணாவிரதமும் நடந்தன.

எம்.ஜி.ஆர்

சென்னை கடற்கரையில் அண்ணா சமாதி அருகே அமைக்கப்பட்ட பந்தலில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உண்ணாவிரதம் இருந்தார்.

இதற்காக எம்.ஜி.ஆர். காலை 5.50 மணிக்கு உண்ணாவிரத பந்தலுக்கு வந்தார். எம்.ஜி.ஆர். வந்தபோது மழை பெய்து கொண்டிருந்தது. கொட்டும் மழையிலும் திரளான பேர் கூடி இருந்தனர்.

சரியாக காலை 6 மணிக்கு எம்.ஜி.ஆர். உண்ணா விரதத்தைத் தொடங்கினார்.

பந்தலில் அமைக்கப்பட்ட மேடையில் எம்.ஜி. ஆருடைய மனைவி ஜானகி அம்மாள், அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், அ.தி.மு.க பொதுச் செயலாளர் ராகவானந்தம், அவைத் தலைவர் ஈ.வெ.அ.வள்ளி முத்து ஆகியோர் அமர்ந்திருந்தனர்.



(தொடரும்)

# அதிகாரத்தால் அழிவுப் பாதையில் அரசியல்வாதிகள் செல்லக் கூடாது

## ஜனாதிபதி மைத்திரி அறிவுரை



(கொழும்பு)

**அதிகாரம் காரணமாக அரசியல்வாதி சீர்கெடுதல் இன்று உலக அரசியலிலும் தேசிய அரசியலிலும் உள்ள பொதுவானதொரு பண்பாக காணப்பட்டபோதும், அதிகாரம் காரணமாக அழிவுப் பாதையில் செல்லாது அதிகாரத்தை நாட்டினதும் நாட்டு மக்களதும் நன்மைக்காக பயன்படுத்துவது அரசியல்வாதிகளின் கடமையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவின் உருவப் படத்தினை நேற்று முன்தினம் முற்பகல் பாராளு மன்ற கட்டத் தொகுதியில் திரைநீக்கம் செய்து வைத்து உரை நிகழ்த்திய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதிகாரமானது அரசியல்வாதியின் பெறுமதியை இல்லாதொழிக்கும் ஒரு யுகத்தில், முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க முன் மாதிரி யான ஒரு தலைவராக விளங்கினார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அதிகாரத்தை நாட்டினதும் பொது மக்களினதும் நன்மைக்கேயன்றி தனது அதிகாரத்தைக் கூட்டிக்கொள்வதற்காக பயன்படுத்தாத அன்னார், உண்மையிலேயே முன்மாதிரியான ஒரு தலைவராவார் என தெரிவித்த ஜனாதிபதி அனைத்து அரசியல் பாத்திரங்கள் பற்றி சிந்திக்கும்போது அன்றுபோலவே இன்றும் நாளையும் டி.பி.விஜயதுங்கவின் அரசியல் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பல பாடங்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

மகா சங்கத்தினர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவின் புதல்வி உள்ளிட்ட உறவினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ)

### மற்றுமொரு சாதனையை நிலைநாட்டிய

# கொழும்பு துறைமுக அபிவிருத்திக்கு புதிய வியாபார அபிவிருத்தித் திட்டம்

## அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

வெவ்வேறுபட்ட முனையங்களாக செயற்படாது ஒரு துறைமுகமாக கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டான புதிய வியாபார அபிவிருத்தி திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.


இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு சொந்தமான ஜயபாலு முனையத்தின் தனித்துவத்தை பாதுகாத்து அத்திட்டத்தை அமுல்படுத்துவதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகம் ஒரு நாளில் அதிகளவு கொள்கலன்கள் கையாண்டு சாதனையை நிலைநாட்டியுள்ளது. இச்சாதனை தொடர்பாக கருத்துரைக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகமானது ஒரு நாளில் அதிகளவு கொள்லன்களை கையாளும் சாதனையினை கடந்த செவ்வாய்க்கிழமை நிலைநாட்டியது. அன்றைய தினம் கொழும்பு துறைமுகம் 22 ஆயிரத்து 422 அளவிலான மொத்த கொள்கலன்களை கையாணடுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறானதோர் சாதனையினை 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நிலைநாட்டியது.

அன்றைய தினம்22 ஆயிரத்து 186 கொள்கலன்கள்கையாளப்பட்டுள்ளன. இச்சாதனையினை புதுப்பிக்கையில் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான ஜயபாலு முனையம் கையாண்ட மொத்த கொள்கலன்களின் அளவு 9 ஆயிரத்து 875 ஆகும். மேலும் பல வெற்றிகளை 2016 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்ளவுள்ளதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் மூன்று முனையங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஜயபாலு முனையத்தினை இலங்கை துறைமுக அதிகார சபையே நிர்வகிக்கின்றது. ஏனைய இரு முனையங்களையும் தனியாரே நிர்வகிக்கின்றனர்.



தற்பொழுது எங்களுடைய ஒரே நோக்கம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான ஜயபாலு முனையத்தின் தனித்துவத்தை பாதுகாத்துக் கொண்டு முழு துறைமுகத்திற்கும் வியாபார திட்டத்தை அறிமுகப்படுத்தல் இல்லையேல் அதனை அபிவிருத்தி செய்தலாகும். அதனால் தான் இன்று எங்களால் புதிய சாதனையொன்றினை நிலைநாட்டக் கூடியதாக இருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமையினாலேயே இவ்வெற்றியை ஈட்டிக்கொள்ள கூடியதாக இருந்தது. ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் எங்களால் இவ்வெற்றியை ஈட்டியிருக்க முடியாது. 2015 ஆம் ஆண்டில் நாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை கண்டறிந்தோம்.

இவ்வருடம் இப்பிரச்சினைகளிற்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்த வண்ணம் உள்ளோம். எனவே எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளை எங்களால் ஈட்டிக்கொள்ளக் கூடியதாக இருக்குமென நான் நம்புகின்றேன் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன்களின் வளர்ச்சியில் புதிய சாதனையொன்றினை நிலைநாட்டியது. 15 மாதங்களிற்கு பின்னர் இவ்வாறானதொரு நேர் மறையான வளர்ச்சியை எட்டியமை விசேட அம்சமாகும். அது +3.6 % வளர்ச்சியாகும். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட முகாமைத்துவ மாற்றத்துடன் இவ்வெற்றியை ஈட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்ததாக இலங்கை துறைமுக அதிகார சபை சுட்டிக்காட்டியது. (இ)

### இன்று ஒரு தகவல்

## களைப்பைக் களைவோம்

மற்றவர்கள் நமக்கு ஏற்படுத்தும் நட்டங்களை விட,நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் நட்டங்களே அளவில் மிகப் பெரியவை.

மற்றவர்கள் நமக்கு நட்டம் ஏற்படுத்த முனைகிறார்கள் என்று அறிந்தவுடனேயே நாம் தயாராகி விடுகிறோம் இதைத் தாங்குவதற்கு அல்லது தடுப்பதற்கு.

ஆனால், நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் நட்டங்கள் இருக்கின்றனவே,அவற்றை நம்மையும் அறியாமல் நாமே விரும்பி மேற்கொள்கிறோம். இவற்றிற்கு காரணமாக அமைபவை இரண்டு.

முதலாவது, ஞாபகமறதி.

இரண்டாவது,சோம்பல் அல்லது சோர்வு. முதலாவது கூட நம் பிடியை விடச் சற்று விலகிப் போய்விடுகின்ற விடயம்! ஆனால் இரண்டாவது இருக்கிறதே இதற்கு முழுக்க முழுக்க நாமே காரணம்.

நாள் முழுதும் உழைக்கும் தொழிலாளியும் சரி, ஏர்கண்டிசன் அறையில் அமர்ந்து வெறும் கையெழுத்துப் போடும் மனிதரும் சரி களைப்பாக இருக்கிறது. சோம்பலாக இருக்கிறது என்றே சொல்லி வருகிறார்கள்.

எல்லாரும் களைப்படையத்தான் செய்கிறார்கள். ஆனால்,அவர்கள் மிகைப்படுத்தி எண்ணிக் கொள்ளும் அளவிற்கு அவர்கள் உண்மையில் களைப்படைவது இல்லை.

களைப்பாக இருப்பதாக எண்ணுவதன் மூலம் நாம் மகிழ்ச்சியை இழக்கிறோம். கெட்டிக் காரத்தனம் மங்கி மங்கிப் போகிறது. புத்தி வேலை செய்யமாட்டேன் என்கிறது.

களைப்பாக இருப்பதாக மனதிற்குப்பட்டால், அந்தக் களைப்பு எப்படி ஏற்பட்டது என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது உடலுக்கு ஏற்பட்டிருக்கும் களைப்பா? உள்ளத்திற்கு ஏற்பட்டிருக்கும் களைப்பா?என்று தெளிவாகப் பிரித்தறிய வேண்டும்.

உடலுக்கு ஏற்பட்ட களைப்பா? ஓய்வு எடுங்கள். தவறில்லை.

உள்ளத்திற்கு ஏற்பட்ட களைப்பானால் ஓய்வு எடுக்காதீர்கள். உற்சாகம் தரும் வேலைகளில் ஈடுபடுங்கள்.

களைப்பைப் போக்குகிறேன் என்று தூங்கிக் கொண்டே இருப்பது மேலும் மேலும் களைப்பைத் தான் உருவாக்கும் என்கிறார் டாக்டர் லூயிபிஸ்க்.

களைப்பாகப் படுத்திருக்கிறீர்கள். புதிய எண்ணங்களை உருவாக்கிக் கொண்டோ அர்த்தமில்லாமலோ திடீரென்று சிலிர்த்துக் கொண்டு எழுங்கள். களைப்பு,காததூரம் விலகி ஓடிவிட்டதை உணர்வீர்கள்.ஒருமுறை இவ்வாறு முயன்று பாருங்கள்.

அநாவசியமான கவலைக்ள்,மனக் குழப்பங்கள் ஆகியவை இதயத்தின் மீது ஏற்படும் பயங்கரமான எடைக்கற்கள். இவற்றை எப்போதும் தூக்கிச் சுமந்து கொண்டிருந்தால் களைப்பைத் தவிர வாழ்வில் வேறெதுவும் மிஞ்சாது.

வாழ்க்கை என்பது குறுகிய ஓட்டப் பந்தயம். அதில் எல்லோரும் விரைந்து ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் முந்துவோம்.

அதை விட்டு விட்டு களைப்பாறிக் கொண்டிருப்பதோ இளைப்பாறிக் கொண்டிருப்பதோ புத்திசாலித்தனமாகாது!

லேனா தமிழ்வாணன்

# பத்தாவது தடவையாகவும் ஆணைக்குழுவை புறக்கணித்த ராஜித

(கொழும்பு)

அமைச்சர் ராஜிதவால் பத்தாவது தடவையாகவும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் அழைப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

பத்தாவது தட வையும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் விசாரணை அழைப்பை சுகாதார அமைச்சர் ராஜித தவிர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த கால ஆட்சியின் போது மீன்பிடி அமைச்சராக பதவி வகித்த தற்போதைய சுகாதார அமைச்சர் அப்போதைய சந்தர்ப்பத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு குழுவினால் பல தடவைகள் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த மாதம் 24 ஆம் திகதியும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சர் ராஜித பல காரணங்களை முன் வைத்து விசாரணைக்கு செல்வதை தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை இந்தத்தடவையும் அமைச்சருக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினரின் விசாரணை அழைப்பு விடுக்கப்பட்ட போது தான் ஜனாதிபதியுடன் அவசரமான கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுள்ளதாகவும் எனவே தனக்கான விசாரணையை வேறொரு நாளுக்கு மாற்றும் படியும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)



# சிறுவர் அரங்கம்

1359

# ரோஜா இளவரசி!



...அப்போது பொழுது சாய்ந்தது. இளவரசியும், தோழிகளும் வருத்தத்துடன் அந்தப்புரம் சென்றனர். தோழியர் ஒன்றுகூடிப் பேசினர்.

"இளவரசியை எப்படியாவது சாபத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அதற்கு வழி கண்டுபிடித்தாக வேண்டும்," என்றாள் ஒரு தோழி.

அறிவு நிரம்பிய மற்றொரு தோழி, "கவலை வேண்டாம். இளவரசி காலையில் தான் ரோஜாச் செடியாக மாறுவாள். இளவரசி எந்தச் செடியாக உள்ளாள் என்பதை என்னால் எளிதில் கண்டுபிடிக்க முடியும. இளவரசியின் சாபத்தைப் போக்க முடியும்," என்றாள்.

"நீ உண்மையாகத்தான் சொல்கிறாயா? அங்கே ஆயிரக்கணக்கான ரோஜாச் செடிகள் உள்ளன. மரங்கள் எதுவும் கிடையாது. ரோஜாச் செடியாக மாறிய இளவரசியை உன்னால் கண்டுபிடிக்க முடியுமா?" என்று ஐயத்துடன் கேட்டாள் மற்றொருத்தி.

"நாளை காலையில் இளவரசியின் சாபம் நீங்குவது உறுதி!" என்றாள் அவள்.

மறுநாள் பொழுது விடிந்தது. கதிரவன் தோன்றினான். அவர்களுடன் இருந்த இளவரசி மறைந்துவிட்டாள்.

அவள் ரோஜாச் செடியாக மாறிவிட்டாள் என்பது அவர்களுக்குப் புரிந்தது. எல்லாரும் விரைந்து சென்று பூந்தோட்டத்தை அடைந்தனர்.

அங்கே எல்லா ரோஜாச் செடிகளும் ஒன்று போலவே இருந்தன. அவற்றிற்குள் எந்த வேறுபாடும் இருப்பதாக தெரியவில்லை.

"இளவரசியைக் கண்டுபிடிப்பேன் என்று உறுதி சொன்ன தோழி, யாரும் எந்தச் செடியையும் பறிக்காதீர்கள்," என்றாள்.

அங்கிருந்த ரோஜாச் செடிகளை ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டே வந்தாள்.

ஒரு செடியைப் பார்த்தவுடன் அப்படியே நின்றாள். அந்தச் செடியையே உற்றுக் கவனித்தாள்.

"இந்தச் செடிதான் இளவரசி!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள அவள்.

அந்தச் செடியை வேரோடு பிடுங்கினாள்.

என்ன வியப்பு! அவள் கையில் இருந்த செடி மறைந்தது. அங்கே இளவரசி நின்றிருந்தாள்.

மகிழ்ச்சியில் திளைத்த தோழிகள் அனைவரும் அவளைப் பாராட்டினர்.

அங்கே ஆயிரக்கணக்கான ரோஜாச் செடிகள் இருந்தன. அவற்றில் ஒன்றாக மாறி இருந்த இளவரசியை அவள் எப்படிக் கண்டுபிடித்து இருப்பாள்? கொஞ்சம் யோசிங்க பிரண்ட்ஸ்.

இரவு முழுவதும் பனி பெய்யும். அதனால் செடிகளின் மீது பனித்துளி படிந்து இருக்கும். காலையில் கதிரவன் தோன்றியதும் ரோஜாச் செடியாக மாறினாள் இளவரசி. அந்தச் செடியில் பனித்துளி படிந்திருக்க வாய்ப்பு இல்லை.

பனித்துளி படிந்திராத ரோஜாச் செடி ஒன்றைப் பார்த்தாள் தோழி. அந்தச் செடி தான் இளவரசி என்று கண்டுபிடித்து அதை வேரோடு பிடுங்கினாள். உடனே, இளவரசியின் சாபம் நீங்கியது.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1668 - ஸ்பெயின் போர்த்துக்கலை தனிநாடாக அங்கீகரித்தது.
- 1755 - ஜாவாவின் மடாரம் பேரரசு 'யோக்யகர்த்தா சுல்தானகம்' மற்றும் 'சுரகர்த்தா சுல்தானகம்' என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1880 - எடிசன் விளைவை தோமஸ் எடிசன் அவதானித்தார்.
- 1914 - பொன்னம்பலம் அருணாசலத்திற்கு சேர் பட்டம் பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.
- 1934 - சோவியத் நீராவிக்கப்பல் செலியூஷ்கின் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரை ஹிட்லரின் நாசிப் படைகளிடமிருந்து மீட்டன.
- 1960 - பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை சோதித்தது.
- 1971 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தெற்கு வியட்நாம் லாவோஸைத் தாக்கியது.
- 1974 - நோபல் பரிசு பெற்ற அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் சோவியத் ஒன்றியத்திலிருந்து நாடு கடத்தப்பட்டார்.
- 1975 - நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் தீ பரவியது.
- 1984 - கான்ஸ்டன்டீன் செர்னென்கோ சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரானார்.
- 1985 - கொக்கிளாய் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டது.
- 1990 - இரண்டு ஜேர்மனிகளும் இணைவது குறித்த இரண்டு-கட்டத் திட்டம் அறிவிக்கப் பட்டது.
- 1996 - நேபாள மக்கள் புரட்சி மாவோயிசவாத போராளிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1879 - சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை (இ. 1949)
- 1910 - வில்லியம் ஷாக்லி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1989)
- 1920 - அ. மருதகாசி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் (இ. 1989)
- 1937 - ரூப்பையா பண்டா, சாம்பிய அரசுத்தலைவர்

### இறப்புகள்

- 1883 - ரிச்சார்ட் வாக்னர், ஜேர்மானிய இயக்குனர், இசையமைப்பாளர் (பி. 1813)
- 1950 - செய்குத்தம்பி பாவலர், தமிழறிஞர் (பி. 1874)
- 2009 - கிருத்திகா, தமிழக எழுத்தாளர்
- 2014 - பாலுமகேந்திரா, தமிழ்த் திரைப்பட இயக்குநர் (பி. 1939)

### சிறப்பு நாள்

- உலக வானொலி நாள்

## பாலுமகேந்திரா



பாலு மகேந்திரா (Balu Mahendra, 1939 மே 20 ஆம் திகதி இலங்கையில் மட்டக்களப்பு அருகே அமிர்தகழி என்ற சிற்றூரில் பிறந்தவர் பாலநாதன் மகேந்திரன் என்ற பாலு மகேந்திரா. இயற்பெயர், மகேந்திரா. அவரது தந்தை பாலநாதன் ஒரு சிறந்த கணித ஆசிரியர், கல்லூரி அதிபர். லண்டனில் தன்னுடைய இளநிலைக் கல்வி படிப்பினை முடித்தார். திரைப் படக் கல்லூரியில் ஒளிப்பதிவுக்கலை பயின்ற பாலு மகேந்திரா 1969 இல் தங்கப்பதக்கம் பெற்றார்.

இவர் இந்தியத் திரைப்பட இயக்குனரும் ஒளிப்பதிவாளருமாவார். சமகாலத் தமிழ் வாழ்க்கையை சித்தரிக்கும் பல படைப்புகளை உருவாக்கியவர். தமிழ், தெலுங்கு, கன்னட, மலை யாள, ஹிந்தி மொழித் திரைப்படங்களில் பணியாற்றியவர்.

ப்ரிட்ஜ் ஒப் ரிவெர் க்வாய் (Bridge of river kwai) திரைப்படத்தின் ஒரு பகுதி இலங்கையில் படமாக்கப்படும் போது பாலகன் பாலு மகேந்திரா அதனை காண நேர்கின்றது. அந்த தாக்கமே அவரை திரைப்படத்துறையில் ஈடுபாடுடையவராக்குகின்றது.

அவரது பட்டயப்படிப்பு திரைப்படத்தைக் கண்டு அவரை "செம்மீன்" படப்புகழ் ராமு காரியத் அவரது "நெல்லு" படத்துக்கு ஒளிப்பதிவு செய்ய அழைத்தார். அப்படத்துக்கு 1972 இல் சிறந்த ஒளிப்பதிவுக்கு கேரள மாநில விருது பெற்றார்.

அதைத் தொடர்ந்து பல மலையாள திரைப்படங்களுக்கு ஒளிப் பதிவு செய்தார். தெலுங்கில் பிரபலமான சங்கராபரணம் படத்தை ஒளிப்பதிவு செய்தார். ஒளிப்பதிவில் தனக்கு என்று ஒரு புதிய பாணியினை அமைத்துக் கொண்டார். இயற்கை ஒளியினை அதிகமாக பயன்படுத்துவது இவருடைய தனித்துவம். முதலில் ஒளிப்பதிவாளராக இருந்து பின் இயக்குனராக மாறியவர். 1977ல் பாலு மகேந்திரா அவரது முதல் படமான "கோகிலா"வை கன்னட மொழியில் இயக்கினார். பாலுமகேந்திரா ஒளிப்பதிவுசெய்த முதல் தமிழ் படம் முள்ளும் மலரும் 1977 இல் வெளியாயிற்று. 1978 இல் தமிழில் அவரது முதல் படமான "அழியாத கோலங்கள்" வெளியாயிற்று. பாலு மகேந்திரா மணிரத்தினம் போன்ற பல முக்கியமான இயக்குநர்களின் முதல் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

சிறந்த இயக்குனருக்கான தேசிய விருதை பாலு மகேந்திரா மூன்று முறை பெற்றுள்ளார. வீடு, சந்தியாராகம், வண்ண வண்ண பூக்கள். சிறந்த திரைக்கதைக்கு கோகிலா, அழியாத கோலங்கள் ஆகியவை விருது பெற்றன. ஜூலி கணபதி சிறந்த படத்தொகுப்புக்கான சாந்தாராம் விருது பெற்றது. இம்மூன்று துறைகளிலும் விருது பெற்ற ஒரே திரைப்பட நிபுணர் அவரே.

# குற்றவாளிகளை சிறையில் அடைக்கவே மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள்

## யோஷிதவின் கைது குறித்து ஐ.தே.க.எம்.பி.கருத்து

(கொழும்பு)

**ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்யவே மக்கள் எமக்கு இருமுறை ஆணை வழங்கினார்கள். கடந்த ஒருவருட காலமாக நிதி மோசடி விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் யோஷித ராஜபக்ஷ குற்றவாளியாக இனம்காணப்பட்ட பின்னரே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.**

தோப்பூரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் யோஷித ராஜபக்ஷவின் கைது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், ஆட்கடத்தல்கள், சொத்துக்குவிப்பு போன்ற ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை இல்லாமல் செய்து குற்றவாளிகளை தண்டிப்பதாக கூறியே நாம் மக்களிடம் ஆணையை கோரியிருந்தோம். ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கைது செய்யவே மக்கள் எமக்கு இருமுறை ஆணை வழங்கினார்கள். கடந்த ஒருவருட காலமாக நிதி மோசடி விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் யோஷித ராஜபக்ஷ குற்றவாளியாக இனம்காணப் பட்ட பின்னரே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைதை அரசியல் பழிவாங்கலாக சித்திரிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சில சுதந்திர கட்சி அமைச்சர்களும் முயற்சிக்கின்றனர். இது அரசியல் பழிவாங்கல் என்றால் தேர்தல் முடிந்த ஒரே நாளில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டதும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கம் செய்யப்பட்டதையும் எவ்வாறு அழைப்பது.

இன்று அரசியல் பழிவாங்கல் என்று கூக்குரலிடும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு நடந்த அநீதிகளின்போது சிவப்பு சால்வைகளால் கண்களை மறைத்துக் கொண்டிருந்தனர்.

எமது அரசாங்கம் அரசியல் ரீதியாக பழிவாங்க நினைத்திருப்பின் இன்று அரசியல் பழிவாங்கல் என கோஷம்போடும் பலர் பாராளுமன்ற தேர்தல் முடிந்த உடனே வெலிக்கடைக்குள் தள்ளப்பட்டிருப்பர். கைது செய்யப்பட முன் ஊழல்வாதிகள் இன்னும் ஏன் கைது செய்யப்படவில்லை என கேள்வி எழுப்பினர். கைது செய்தால் அரசியல் பழிவாங்கல் என கூறுகின்றனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றுசேர்த்து நிதி மோசடி பிரிவை மூடுமாறு பெருந்தொகையான தேங்காய்களை உடைத்துள்ளனர். இதற்கான தேங்காய்கள் அரச காணி ஒன்றில் இருந்து திருடப்பட்டதாக அறியக்கிடைத்தது. திருடர்களை காப்பாற்ற திருட்டு தேங்காய் உடைக்கிறார்கள். இதை பணம் கொடுத்து வாங்கினால் குருநாகலிலுள்ள தேங்காய் வியாபாரிகளுக்காவது சிறிது இலாபம் கிடைத்திருக்கும். குருநாகலில் இருந்து அதி கூடிய விருப்பு வாக்கு களை பெற்று பாராளுமன்றத்தில் வாய்மூடி இருப்பவர்கள் இந்த உதவியையாவது அம்மக்களுக்கு செய்திருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

இலங்கை மின்சார சபைக்கு

## மனிதவள கம்பனிகளூடாக ஆட்சேர்ப்பு நடைபெறாது

இலங்கை மின்சார சபைக்கு எதிர்காலத்தில் மனிதவள கம்பனிகளூடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மனிதவள கம்பனிகளூடாக ஏற்கனவே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் நிரந்தரமாக உள்வாங்கப்படுவர்.

இலங்கை மின்சாரசபை, இலங்கை மின்சக்தி கம்பனி, இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு போன்ற எனது அமைச்சின் கீழ்வரும் அனைத்து நிறுவனங்களுக்கும் மனிதவள கம்பனியிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்வதை நிறுத்துவதற்கு கொள்கை ரீதியாக முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

மனிதவள கம்பனிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் நிறுவனத்திற்கோ அல்லது ஊழியர்களுக்கோ எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை என்பதுடன் மனிதவள கம்பனிகள் மேற்படி நடைமுறையை தவறாகப் பயன்படுத்தியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது எல்லா மனிதவள ஊழியர்களும் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவர் எனத் தெரிவித்திருந்தார். அதேபோன்று அனைவரும் உள்வாங்கப்படுவர்.

மனிதவள கம்பனிகளூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 5 ஆயிரம் பேரில் 3 ஆயிரம் பேருக்கான நிரந்தர நியமனத்திற்கு அவர்களின் தகைமைகளுக்கு அமைவாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை களவாக மின்சாரம் பெறுபவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

மேலும் 2 ஆயிரத்து 704 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 170 மில்லியன் ரூபா தண்டப்பணமாகவும் மேலதிக கட்டணமாகவும் அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 631


கீர்த்திகா வடிவேல்




நதீபன்




பாலா சர்மா





துளசி




மக்ரெஸ்




ஜீனோ



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஓய்வுபெறும் வயதை 65 வரை நீடிக்கலாமா?

எட்டு எட்டாய் மனித வாழ்வை பிரித்துக்கொள், அதில் எந்த எட்டில் நீ இருக்கிறாய் என்று தெரிந்து கொள் என்று எழுதிய கவிப்பேரரசு வைரமுத்து நீஏழாம் எட்டில் காணாதது ஓய்வு இல்லை என்று அழுத்தமாய் சொல்கிறார்! இன்றைய நிலையில் 56 வயதில் ஓய்வு பெறுவது சரியா? அல்லது மக்களால் முடிகிறதா? இந்தக்கேள்வி நிச்சயம் விவாதத்துக்கு உரியதே!

இலங்கை மருத்துவ வசதிகளில், நோய்கள், கல்வி தொடர்பான விழிப்புணர்வில் முன்னேறி வருதல் பிறப்பு, இறப்பு வீதத்தை குறைத்து இலங்கை பிரஜை ஒருவரின் சராசரி ஆயுட் காலத்தை எழுபதுக்கும் மேலாக துரத்தியிருக்கிறது! இது ஒரு சாதனையே ஆனாலும் புதிதாக சிக்கல்களும் தலைதூக்கியுள்ளன! 2041 இல் உழைக்கும் குடித்தொகையை விட தங்கி வாழ்வோர் எண்ணிக்கை அதிகமாகப்போகிறது அதிலும் அறுபது வயதுக்கு மேலான முதியோர் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரிக்கப் போகிறது என ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் அறிக்கையொன்று அபாய அறிவிப்பு விடுக்கிறது!

இது தொடர்பில் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன சென்ற வாரம் பாணந்துறையில் கருத்து தெரிவிக்கையில், அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் தனிப்பட்ட ரீதியில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை அறுபதாக இருப்பதில் தனக்கும் நேர்மறையான அபிப்ராயமே இருப்பதாக தெரிவித்திருந்தார். இது பல்வேறுபட்ட தரப்பினரதும் கவனத்தை ஈர்த்த விடயமொன்றாகி இருக்கிறது!

சமீபத்தில் சிங்கப்பூர் கூட ஏற்கனவே ஓய்வு பெற்ற 67 வயதெல்லைக்கு உட்பட்டவர்களுக்கு மீள்நியமனம் வழங்குவதாக அறிவித்திருந்தது. அதிலும் தொண்ணூறு வீதத்துக்கு மேற்பட்டோர் பணிக்கு திரும்பியிருப்பது அங்கே அத்திட்டத்தின் வெற்றிக்கு சான்று என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையிலும் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிப்பது நிச்சயம் நாடு எதிர்கொள்ளப்போகும் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும் தான. இருப்பினும் இதில் தீமையான விளைவுகளும் உள்ளன என்று ஒரு சாரார் வாதிடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரான ஜெயக்குமாரிடம் பேசிய போது அவர் இத்திட்டத்தை ஆணித்தரமாக வரவேற்றார். "எனக்கு இப்போது அறுபத்தொரு வயது. சென்ற வருடம் என் வயதினால் ஓய்வு பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும் மனதாலும் உடலாலும் ஓய்வில் இருக்கக்கூடிய நிலைக்கு நான் இன்னும் வரவில்லை. ஆகவே இரண்டு மாதங்களிலேயே எனக்கு மனதளவில் பெரும் விரக்தி ஏற்படவே தனியார்பத்திரிகை நிறுவனம் ஒன்றில வேலை தேடிக்கொண்டேன். என்னை பொறுத்தவரை உடல்தகுதி ரீதியிலும் தனிநபர் விருப்பின் அடிப்படையிலும் ஓய்வு பெறும் வயதை தீர்மானிப்பது சிறந்தது. எப்படியிருந்தாலும் அறுபது வயதென்பது தற்காலத்தில் மிக மிக குறைந்ததே!"என்றார் அவர்.

"எங்கள் நாட்டில் நான்கு வருட பட்டத்தை கையில் வாங்கி வெளிவரும்போது குறைந்த பட்சம் நமக்கு இருபத்தைந்து வயதாகி விடுகிறது! பிறகு மேற்படிப்பு, ஒருதொழிலில் நம்மை ஸ்திரப்படுத்தல் என்று மேலும் இரண்டு வருடங்களை விழுங்கி விட முப்பதில் தான் திருமணம் பற்றி யோசிக்கவே முடிந்தது! என் இரண்டாவது குழந்தை பிறந்தபோது என் வயது முப்பத்து ஏழு! இப்போதைய ஓய்வு பெறும் வயதெல்லையான அறுபது வயதில் அவளுக்கு வெறும் முன்னிருபதுகள் நடந்து கொண்டிருக்கும்! அந்த வயதில் என்னால் ஓய்வு பெறுதலை பற்றி சிந்தித்தும் பார்க்க முடியாது!" என்றார்நாற்பது வயதான அரச ஊழியரான பிரதீபன்.

இருவரது வாதங்களும் சரியே. நாட்டின் கல்வி நிலை வளர்ச்சி, பெண்கல்வி விழிப்புணர்வு போன்ற சாதகமான விடயங்கள் திருமணம் மற்றும் முதல் குழந்தை பெறும் வயது என்பவற்றை பிற்போட அறுபது வயதில் ஓய்வு என்பது ஆட்டமிழக்கும் முன்னரே மைதானத்தில் இருந்து வெளியேற்றப்படும் வீரர்களின் மனோநிலைக்கு மக்களைத் தள்ளப்போகிறது! ஜெயக்குமார் சொன்னது போல பொறுப்புக்களும் ஓய்வின் பின்னே என்ன செய்யப்போகிறோம் போன்ற கவலைகளும் சேர்ந்து கொண்டு அறுபது வயது நெருங்க நெருங்க உள ரீதியான அழுத்தங்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்! உடலாலும் மனத்தாலும் இயலும் நிலையில் உள்ளவர்கள் ஏன் வலுக்கட்டாயமாக தங்கி வாழ்வோர் நிலைக்கு அறுபது வயதில் தள்ளப்பட வேண்டும்? அத்தோடு அனுபவமும் அறிவும் வாய்ந்த வயதானோர் தங்களுக்கு கீழான இளைஞர்களுக்கு வழிகாட்டும் வாய்ப்பும் அதிகரிக்கிறதே! பெரும் பணம் செலவு செய்து இலவச கல்வியை அளிக்கும. அதனால் பயன்பெற்ற மக்களை நாட்டின் பொருளாதாரத்துக்காய் வினைத்திறனுடன் பயன்படுத்திக்கொள்வதற்கும் இது வழி வகுக்கும்!ஆகவே அறுபத்தைந்து வயதாக ஓய்வு பெரும் வயதெல்லையை அதிகரிப்பதை ஆதரிப்போம் என்று முடிவு செய்தால் அதிலும் சில பிரச்சினைகள் உணடென்கிறார்கள் மறுசாரார்.

நிரூபன், பேராதனை பல்கலைக்கழக இறுதிவருட மாணவர் இந்த திட்டத்தை பயத்தோடு தான் பார்க்கிறார். ஏற்கனவே நாட்டில் நிலவும் வேலையில்லா திண்டாட்டத்தை இது மேலும் அதிகரித்து விடும் என்பது அவரது பயமாக இருக்கிறது. ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிக்கும் அதே நேரம் அரசாங்கம் இளைஞர் வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

இளைஞர்களோடு ஒப்பிடும் போது அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களின் வேலை வினைத்திறன் வயதினால் ஏற்படும் உடல் மனத்தளர்ச்சி காரணமாக குறைந்து விடும். தொடர்ந்து ஒரே வேலையை மிக அதிக காலம் செய்வதும் வினைத்திறன் குறைய காரணம் ஆகிவிடக்கூடும். இது தவிர கடினமான, திறன் குறைவான,உடலுழைப்பு சார் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்களுக்கு இந்த வயதெல்லை அதிகரிப்பு பெரும் சுமையாக அமைந்து விடக்கூடும்!

ஆகவே அறுபதில் தடைதாண்டல் பரீட்சை போல ஓவ்வொரு ஊழியரும் சுய விருப்பத்தின் அடிப்படையில் மருத்துவ ரீதியாக தன் உடல் தகுதியையும் அலுவலகத்தில் செயல்திறன் மதிப்பீடு மூலம் அவருடைய வேலை வினைத்திறனையும் உறுதி செய்த பிறகே அறுபத்தைந்து வயது வரை தொடர அனுமதி வழங்கப்படுவது நலம். அதிலும்செயல்திறன் மதிப்பீட்டறிக்கை விடயத்தில் சாதி, இனம், மத, தனிப்பட்ட பாரபட்சமோ, இலஞ்சம் வழங்குதலோ அன்றி நேர்மையான முறையில் முடிவுகள் எடுக்கப்படுவதை உறுதி செய்தல் அரசாங்கத்தின் கடமையாகும்!

**உஷாந்தி கௌதமன்**

# செய்தித் துளிகள்

## எம்.பி. ஒருவரை 3 இடங்களில் தடுத்து நிறுத்திய பொலிஸார்

நாடாளுமன்றத்திற்கு நேற்று வரும் வழியில் பொலிஸ் அதிகாரிகள் தனது வாகனத்தை மூன்று இடங்களில் நிறுத்தியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

ராஜகிரிய பிரதேசத்திலிருந்து நாடாளுமன்றத்தற்கு செல்லும் வழியில்தான இந்த அனுபவத்தை எதிர்நோக்கியதாகவும் இதன் காரணமாக சபையில் மனுவொன்றை தாக்கல் செய்யும் சந்தர்ப்பம் இல்லாமல் போனதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் சபாநாயகர் மனுவை சமர்பிக்க சாலிந்த திஸாநாயக்கவுக்கு சந்தர்ப்பத்தை வழங்கினார். (இ)

## யானையின் தாக்குதலுக்குள்ளாகி வெளிநாட்டவர் ஒருவர் படுகாயம்

பொலநறுவை, ஹபரனையில் உள்ள தேவாலகட என்ற இடத்தில் வைத்து காட்டு யானையால் வெளிநாட்டவர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெளிநாட்டவர் காட்டு யானையை புகைப்படம் எடுக்க முயன்றபோதே தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். காயமடைந்த வெளிநாட்டவர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார். அவரின்உயிருக்கு ஆபத்து இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் எந்த நாட்டை சேர்ந்தவர் என்ற விடயத்தை பொலிஸார் அறிவிக்கவில்லை. (இ)

## இருவருக்கு மரண தண்டனை விதிப்பு

கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் இரண்டு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு இரத்தினபுரி, மன்ததெனிய பிரதேச நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்த சம்பவம் தொடர்பான வழக்கு 17 வருடமாக இடம் பெற்று வந்த நிலையில் இரத்தினபுரி மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஹோமாகம மற்றும் அநுராதபுரம் பகுதிகளை சேர்ந்த இருவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (இ)

## கண்புரை நோய் அபாயம்

அதிக வெளிச்சம்,வெப்பம் காரணமாக தற்போது கண்புரை நோய் ஏற்படுவதற்கான வாய்பபுகள் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கண் வைத்திய சாலையின் விஷேட வைத்திய நிபுணர் முதிதா குலவங்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், மிக நீண்ட நேரம் வெயிலில் கண்களை திறந்து வைத்துக் கொண்டிருப்பதும் இந்த கண்புரை நோய் வருவதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொளவது அனைவரதும் கடமையாகும். எனவே, குளிரூட்டும் கணணாடிகளை அணிந்து வெளியே செல்வதால் இந்த நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## சிறுநீரக நோய் காணப்படும் பகுதிகளில் சுத்தமான நீரை வழங்க நடிவடிக்கை

சிறுநீரக நோய் பரந்த அளவில் காணப்படும் பகுதிகளில் மக்களுக்கு சுத்தமான நீரை பெற்றுக் கொடுப்பது தொடர்பான, வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஐந்து மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக, அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

07 பில்லியன் ரூபாய் செலவில் மூன்று கட்டங்களாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதோடு, இதன் முதல் கட்டம் இன்று 13 ஆம் திகதி வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி


அமெரிக்க சந்தையில் நேற்று முன்தினம் மசகு எண்ணெய் பெரல் ஒன்று நூற்றுக்கு 5% தால் குறைவடைந்துள்ளது. இதனால் உலக சந்தையில் பெற்றோலின் விலை மேலும் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார தடைகள் நீக்கப்பட்ட பின்னர் ஈரானும் ஈராக்கும் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துள்ளது. அதேபோன்று சவுதி அரேபியாவும் எண்ணெய் ஏற்றுமதியை அதிகரித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளே எண்ணெய் விலையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது. (இ)

# உடற்பருமனைக் குறைப்பதற்கு அர்ப்பணிப்பு மிகவும் அவசியம்

வைத்திய நிபுணர் அரவிந்தன் உடற்பருமனை குறைப்பதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடனான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு மற்றும் அகஞ்



சுரக்கும் தொகுதியியல் தொடர்பான சிறப்பு வைத்திய நிபுணர் ம. அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் குறிப்பாக இளம் சமுதாயத்தினரிடையே உடல் நிறை அதிகரித்தல் நோயானது அதிகரித்து காணப்படுகிறது. இது தொடர்பாக ஆலோசனைகளை பெறும் வகையில் அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில்,

**1) உடற்பருமன் அதிகரித்தலென்பது இன்று உலகளாவிய ரீதியில் பாரிய ஒரு பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இன்று உடற்பருமன் அதி கரித்தல் (obesity) என்பது மருத்துவத் துறைக்குப் பிரதானமானவொரு சவாலாக இருந்து வருகின்றது. இதன் தாக்கத்தை வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்லாது எமது நாடு போன்ற வளர்முக நாடுகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி எமது நாட்டிலும் குறிப்பாக சிறுவர்களிடையே உடற் பருமனாதலென்பது அதிகரித்துக் காணப்படுகின்றது. உடல் நிறை அதிகரித்தல் என்பதை உலக சுகாதார தாபனமானது ஒரு நோயாக அண்மையில் அறிவித்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் எமது மக்களிடையே காணப்படும் தவறான வாழ்க்கை முறைகள் மற்றும் பழக்க வழக்கங்களே இவ்வாறான அதிகரிப்புக்குப் பிரதான காரணமாகும்.

**2) உடற் பருமனாவதற்குத் தவறான வாழ்க்கை முறைகளே பிரதானமான காரணமெனக் கூறியிருந்தீர்கள். இது பற்றி சிறிது விளக்கமாகக் கூறுங்கள்?**

இன்றைய எமது வாழ்க்கை முறையானது (life style) இயந்திர மயமானதாக, மேற்கத்தேய சாயலையொட்டியதாக மாறி வருகின்றது. எமது உணவுப் பழக்கவழக்கங்களும் மேற்கத்தேய மற்றும் துரித வகையாக (western and fast food) மாறிக்கொண்டு வருவதைக் காணக்கூடிய தாகவுள்ளது. உலகமயமாதலின் (Globalizahm) மூலம் இன்று உலகின் எந்த மூலையில் கிடைக்கக் கூடிய உணவையும் எமது சந்தை களில் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

பெரும்பா லான மக்கள் இயந்திர மயமான வாழ்க்கை முறைக்கு அடிமைப்பட்டு உட்கார்ந்த நிலையில் வாழும் வாழ் க்கைமுறைக்கு (Sedentary life style) வாழப் பழகி விட்டார்கள்.

இவ் வாறான காரணங்களால் உடல் பருமனாதல் ஏற்பட்டு பலவிதமான தொற்றா நோய்களுக்கு (Non-Cornmuni cable diseases-NCD) ஆளாக நேரிடுகிறது.

**3) உடற் பருமனாவதால் ஏற்படக் கூடிய தொற்றா நோய்கள் (NCD) யாவை?**

உடற் பருமனாவதால் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிகளவு உடற் கொழுப்பு என்பன ஏற்படுகின்றன.

எமது நாட்டின் சனத் தொகையில் பத்தில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி எமது தலைநக ரான கொழும்பிலுள்ள மக்களில் ஏறக்குறைய 20% ஆனோர் நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முந்திய நிலையினால்



(Pre diabetes) பாதிக் கப்பட்டுள்ளனர்.

அதேபோல ஏறக்குறைய 25% ஆனோர் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கான பிரதான மான காரணியாக உடற்பருமன் அதிகரித்தலே உள்ளது.

உடல் நிறை அதிகரிப்பதால் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படவும் நேரிடுகிறது.

**4) ஒருவர் தனது உடற்பருமன் நிலையை (Obesity stage) எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?**

ஒருவரின் உயரத்திற்கேற்ப அளவில் உடல் நிறையிருப்பது அவசியமாகும். இதனைக் கணிப்பதற்கு உடற்பருமன் சுட்டெண் (Body mass index (BMI)) என்பது உதவுகிறது.

$$BMI = \frac{\text{உடல்நிறை (Kg)}}{\text{உயரம்}^2 \ (M^2)}$$


இந்த BMI கணிப்பீட்டின் மூலம் ஒருவரின் உடற்பருமன் நிலையை அறிந்து கொள்ள முடியும். இதன் ஆசிய மக்களைப் பொறுத்த வரையில் ஆரோக்கியமான BMI அளவீடாக 17-23 கருதப்படுகிறது. 23-25 அளவானது மிதமான உடல் நிறை அதிகரிப்பு (Over Weight) எனவும் 25 இலும் அதிகமாக இருத்தல் கணிசமான உடல் நிறை அதிகரிப்பு (Obesity) எனவும் அழைக்கப்படுகிறது.

BMI அளவீட்டைக் கொண்டு Obesity என்பதையும் மேலும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ள முடியும். இடுப்புச் சுற்றளவும் உடற் பருமனின் விளைவுகளைத் தீர்மானிக்கும் பிரதானமான அளவீடாகும். எமது மக்களைப் பொறுத்த வரை இடுப்புச் சுற்றளவு அதிகரித்தல் (Central Obesity) முக்கிய பிரச்சினையாக இருக்கிறது.

இவ்வாறான அளவீடுகளைக் கணித்துக் கொள்ளவும் இது பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் பொது மக்கள் எந்தவொரு வைத்தியரையும் நாட முடியும்.

சுகாதார அமைச்சானது இன்று ஆரோக்கிய வாழ்க்கை முறை சிகிச்சை நிலையங்களை (Healthy life Style Clinic) ஒவ்வொரு பிர தேசத்திலும் அமைத்து வருகிறது. இவ்வாறான நிலையங்களிலும் இது சம்பந்தமான மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**5) உடற்பருமனாவதற்கான வாழ்க்கை முறைகள் தவிர்ந்த வேறு காரணங்களும் உள்ளனவா?**



ஆம். பரபம்பரையும் ஒரு காரணமாகும். இதைவிட சில அகஞ்சுரக்கும்தொகுதிசம்பந்தமான(ஓமோன்) நோய்களும் காரணங் களாகும்.

தைரொயிட் சுரப்புக் குறை பாடு (Hypothybidilm) மற்றும் Cushing Syndrome என்பன இவற்றுக்கு உதாரணங்களாகும். சிறுவர்களில் சில நிறமூர்த்த அல் லது வேறு விதமான நோய்களும் (Syndromes) காரணங்களாக அமைகின்றன.

எனவே உடற்பருமனாவதற்கு இவ்வாறான காரணிகள் ($2^{ry}$ causes) இருப்பின் வைத்திய ஆலோசனையின் மூலம் குணமாக்கிக் கொள்ள முடியும்.

**6) உடற்பருமனான ஒருவருக்கு எவ்வாறான ஆலோசனைகளை வழங்க விரும்புகின்றீர் கள்?**

முதலாவதாக ஆரோக்கியமான வாழ்க்கை முறை (Healthy life style) பற்றிய விழிப்புணர்வு அவருக்கு ஏற்பட வேண்டும். தனது உடல் பருமனைக் குறைப்பதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

வைத் திய ஆலோசனையுடன் உடற் பருமனைக் குறைக்கக் கூடிய ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள வேண்டும். இனிப்பான, மாச்சத்து நிறைந்த மற்றும் கொழுப்பு அதிகமான உணவுகளை இயன்றவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உடற் பயிற்சியைக் கிரமமாக மேற்கொள்வதன் மூலமும் மேலதிகமான உடல் நிறையைக் குறைத்துக் கொள்ள முடியும். எவ்வாறான உடற்பயிற்சிகள் செய்ய முடியும் என்பது பற்றிய விபரங்களை வைத்தியரிடமிருந்து அறிந்து அவ ற்றை மேற்கொள்வது மிகச் சிற ந்த தாகும்.

சில சந்தர்ப்பங்களில் வைத்திய ஆலோசனைப்படி உடல் நிறையைக் குறைப்பதற்கு சில வகையான மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

மிகுந்த உடற்பருமன் (Morbid obesity) உடையோருக்கு அவர்களின் மேலதிக நிறையைக் குறைப்பதற்கு சத்திரசிகிச்சை முறைகளும் (Banatric Surgery) மேற்கொள்ளப்பட நேரிடலாம்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை வைத்தியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

**7) எமது நாட்டில் இப் பிரச்சினையைக் குறைப்பதற்கு எவ்வாறான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன?**

சுகாதார அமைச்சானது உடற்பருமனைக் குறைப்பது தொடர்பாக பல செயற்றிட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

குறிப் பாக பாடசாலை உணவகங்களில் விற்கப்படும் உணவு வகைகள் ஆரோக்கியமானதாக, உடற் பரு மனை அதிகரிக்காத வகையில் இருக்க வேண்டுமென வலியுறுத் தப்பட்டுள்ளது.

இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதியியல் நிபுணர்களின் கல்லூரி (Sri Lanka College of Endocrinologists) மற்றும் இலங்கை நீரிழிவுப் பேரவை (SriLanka Diabetes Federahm) என்பன இணைந்து உடற்பருமனைத் தவிர்த்தல் (Prevention of obensity) தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது பல செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. நாம் எல்லோரும் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தினை உணர்ந்து செயற்படுவோமாயின் ஆரோக்கியமான ஒரு எதிர் கால சந்ததியை உருவாக்க முடியும்.



**வைத்திய கலாநிதி ம.அரவிந்தன்**
நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதியியல் தொடர்பான சிறப்பு வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**நேர்காணல்:- பொ.சோபிகா**

# தமிழ் சினிமா வரலாறு

## 99 பாட்டு - நடனம் இல்லாத முதல் படம்

## அந்தநாள்

....எங்களுடைய முந்திய படங்களின் வெற்றியில் பாதி கூட இவை அடையவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் ஏவி.எம்.

**அந்த நாள்**

இந்தியாவுக்கு சத்யஜித்ரே எப்படியோ, அதுபோல் ஜப்பானுக்கு அகிரா குரேஷவா.

படங்களை யதார்த்தமாகவும் சிறப்பாகவும் எடுக்கும் டைரக்டர். உலகின் மிகச் சிறந்த டைரக்டராகப் போற்றப்பட்டவர்.

நாங்கள் டைரக்டர்கள். ஆனால், குரேஷவா, டைரக்டர்களின் டைரக்டர் என்று ஜுராசிக் பார்க் முதலிய சிறந்த படங்களை எடுத்த டைரக்டர் ஸ்டீபன் ஸ்பெல்பர்க் பாராட்டியிருக்கிறார்.

1953 இல் குரேஷவா எடுத்த ரோஷமான் என்ற படம், அவருக்கு உலகப் புகழைத் தேடித் தந்தது.

கணவனுடன் காட்டில் போய்க் கொண்டிருக்கும் ஒரு அழகிய பெண், கொள்ளைக்காரனால் வழிமறிக்கப் படுகிறாள். கணவனைக் கட்டிப்போட்டுவிட்டு மனைவியை கற்பழிக்க முயல்கிறான் கொள்ளைக்காரன்.



என்னைக்கொன்றுவிட்டு அவளைத் தொடு என்கிறான் கணவன். அவனை அவிழ்த்துவிட்டு, போர் புரிகிறான், கொள்ளைக்காரன். இதில் கணவன் கொல்லப்படுகிறான்.

இந்த சம்பவத்துக்கு முன்னும் பின்னும் என்ன நடந்திருக்கும் என்று நாலைந்து பேர் பிளாஷ் பேக்கில் சொல்வார்கள். அதுதான் படம். புதிய உத்தியுடன் வெளிவந்த படம் இது.

ஜப்பான் சென்றிருந்த ஏவி.எம். இந்தப் படத்தைப் பார்த்தார். அந்த பாணியில் புதுமையாக ஒரு படத்தைத் தயாரிக்க அவர் விரும்பினார்.

இதற்கான கதையை ஜாவர் சீதாராமன் உருவாக்கினார். ஏற்கனவே டைரக்ஷன் துறையில் அனுபவம் பெற்றிருந்த எஸ்.பாலச்சந்தர், இதை டைரக்ட் செய்தார்.

ஆடல், பாடல் இல்லாமல் தயாரிக்கப்பட்ட முதல் படம் "அந்தநாள்" இதில், அந்நிய நாட்டுக்கு உளவாளியாக செயற்படுபவராக (ஆன்டி ஹீரோ) சிவாஜிகணேசன் நடித்தார். அவருடைய மனைவியாக தேசபக்தி மிக்கவராக பண்டரிபாய் நடித்தார்.

கணவனைக் கொன்றதாகக் குற்றவாளிக்கூண்டில் பண்டரிபாய் நிற்கும் காட்சியுடன் படம் தொடங்கும்.

சாட்சிகள் தங்கள் கண்ணால் கண்டதைக் கூறுவதுடன், "என்ன நடந்திருக்கும்" என்ற ஊகத்தையும் சொல்வார்கள். எதிர்பாராத திருப்பத்துடன், படம் முடியும்.

சி.ஐ.டி. அதிகாரியாக ஜாவர் சீதாராமன் சிறப்பாக நடித்திருந்தார்.

சிவாஜியின் காதலியாக நடித்தவர் சூரியகலா.

குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம், மிக உயர்தரமாக அமைந்தது. படித்தவர்களும், புதுமை விரும்பிகளும் படத்தை விரும்பிப் பார்த்தார்கள். கிராமங்களில் அவ்வளவாக ஓடவில்லை.

எனினும் தமிழில் ஆடல் பாடல் இல்லாமல் தயாரிக்கப்பட்ட முதல் படம் என்ற பெருமையை அந்த நாள் பெற்றது.

**இந்திப்பட உலகில் முத்திரை பதித்தார்**

தொடர்ந்து பல இந்திப்படங்களை ஏவி.எம். எடுத்தார். மும்பையில் வசித்த இந்தி நட்சத்திரங்கள், விமானத்தில் சென்னைக்கு வந்து, சில நாட்கள் தங்கி, நடித்துவிட்டுச் செல்வார்கள்.

நாடகமாக நடித்து வந்த "ரத்த பாசம்" கதையை டி.கே.எஸ். சகோதரர்கள் 1954 இல் படமாக எடுத்தார்கள். நல்ல வெற்றி பெற்ற படம் இது. இந்தக் கதையை எழுதி, நாடகமாகவும் எழுதியவர். ஸ்ரீதர். பின்னாள் "நம்பர் 1" டைரக்ரராக உயர்ந்தவர். (தொடரும்)

# நௌரு எதிர்கொண்டுள்ள புகலிடக்கோரிக்கையாளர்கள்!

...நான் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட போது எனது கணவர் காணாமற் போனார். இதுவரை இவர் தொடர்பான தகவல் கிடைக்கப் பெறவில்லை. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது காணாமற்போன பல பத்தாயிரக் கணக்கானவர்களில் எனது கணவரும் ஒருவராவார்' என துர்க்கா தெரிவித்தார்.




கொழும்பில் துர்க்கா தங்கியிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர்கள் இவரை வந்து சந்தித்தனர். இதனால் இவர் மீண்டும் இலங்கை புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் மீண்டும் விடுவிக்கப்பட்ட பின்னர், அரச படையினரால் அடிக்கடி துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதன் பின்னர் 2007 இல் இவர் இந்தியாவிற்குத் தப்பிச் சென்று தமிழ்நாட்டு அகதி முகாம் ஒன்றில் தஞ்சம் புகுவதற்கு இவரது நண்பர்கள் துர்க்காவிற்கு உதவினர். இதன்பின்னர் 2014 இல் துர்க்கா தனது மகனுடன படகின் மூலம் அவுஸ்திரேலியாவை சென்றடைந்தார்.

ஜூலை 2014 இல் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட படகில் பயணம் செய்த 157 புகலிடக் கோரிக்கையாளர்களில் துர்க்காவும் ஒருவராவார்.

இவர்கள் அவுஸ்திரேலியக் கப்பல் ஒன்றில் ஒரு மாதம் வரை கடலில் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்கள் மீண்டும் இந்தியாவிற்கு அனுப்புவதற்கான முயற்சிகளில் அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபட்ட போதிலும், இவர்களைப் பொறுப்பெடுக்க இந்தியா மறுத்தது.

ஏனெனில் இவர்களில் எவரும் இந்தியக் குடிமக்கள் அல்லர். இதனால் அவுஸ்திரேலிய அரசாங்கம் இவர்களை நௌரு தீவிற்கு வலுக்கட்டாயமாக அனுப்பியது.

'நௌரு தீவில் எவ்வித பாதுகாப்பும் இல்லை. நாம் தங்க வைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் எவ்வித பூட்டு வசதிகளும் காணப்படவில்லை. எவரும் எந்த வேளையிலும் எமது கூடாரத்திற்குள் நுழையலாம். பாதுகாப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் கூட என்னை அச்சுறுத்தியுள்ளனர். அவர்கள் என்னை பிடித்திழுத்தனர். இதனால் நான் எப்போதும் அச்சத்துடனேயே வாழ்கிறேன்' என துர்க்கா தெரிவித்தார்.

'இலங்கையில் எனக்கு உண்டான காயங்களால் நான் நித்திரை மாத்திரைகளை உண்டுவிட்டு படுத்துறங்கினேன். அடுத்த நாள் காலையில் நான் எழுந்து பார்த்த போது, எனது உடைகள் களையப்பட்டிருந்தன என்பதை மனநல மருத்துவ மாதுவிடம் தெரிவித்தேன். அவர் எனது முறைப்பாட்டை தனது தீவிர கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதன்பின்னரே நான் நௌருவிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு இடம்மாற்றப்பட்டேன்' என்கிறார் துர்க்கா.

துர்க்கா தனது மகனுடன் ஜனவரி 2015 தொடக்கம் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தான் மீண்டும் நௌருவிற்குத் திருப்பி அனுப்பப்படலாம் என அச்சம் கொள்வதாக துர்க்கா தெரிவித்தார்.

(தொடரும்)

**வழிமூலம் - The Guardian**
**ஆங்கிலத்தில்- Ben Doherty**
**நித்தியபாரதி**

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தைப் பொறுத்து.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தசரதச் சக்கரவர்த்தியை விட அவன் மகன் இராமன் உத்தமன்

தசரத சக்கரவர்த்திக்கு உத்தியோகபூர்வமாக மூன்று மனைவியர். முதல் மனைவி கோசலை. இரண்டாவது மனைவி கையேயி. மூன்றாவது சுமத்திரை. இதுதவிர, மன்னர்களுக்கு இருக்கக்கூடிய சுகபோக இயல்பு தசரதனுக்கும் இருந்ததாகக் கேள்வி. இப்போது அவை பற்றிய ஆய்வுத் தேவை எதுவுமில்லை.

எனினும் இத்தகைய தசரதனுக்குப் பிறந்த இராமன் ஏகபத்தினி விரதனாக-தர்மத்தை நிலைநாட்டும் தலைவனாக விளங்கினான்.

ஆக, தசரதச் சக்கரவர்த்தியை விட இராமன் எத்தனையோ மடங்கு உயர்வானவனாக விளங்கினான் என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆயிரக்கணக்கான மனைவியரை வைத்திருந்த தசரதனுக்குத்தான் ஏகபத்தினி விரதன் பிறந்தான் என்றால் இதுதான் உலகம்.

ஆக, எம் முன்னோர்கள்; எம் குருமார்கள்; எம் ஆசிரியர்கள்; எம் விரிவுரையாளர்கள் தவறு விட்டார்கள் என்பதற்காக பிள்ளைகள்; மாணவர்கள்; இளைஞர்கள் தவறு விடுவதென்பது உலக ஒழுங்குக்கு உரியதன்று.

என்னை விட என் பிள்ளை அறிவில், பண்பில், ஒழுக்கத்தில் உயர்வானவன். என் பிள்ளையை விட என் பிள்ளையின் பிள்ளை இன்னும் உயர் குணம் படைத்தவன் என்பதாகவே பரிணாமம் அமைதல் வேண்டும். அப்போதுதான் தர்மமான உலகம் உருவாகும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக எங்கள் மண்ணில் நிலைமை வேறுவிதமாக அமைகிறது. அத்தகையதொரு அமைவு எங்கும் அதர்மத்தைப் பரப்பி உலக வாழ்வைத் துன்பமாக்கி விடும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் இடையே மோதல் நடந்தது என்ற செய்தி கண்டு கலங்கிப் போனவர்கள் பலர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களே கல்வி கற்றனர். விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் என அனைவரும் தமிழர்கள் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலை அதுவன்று.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பட்டப் படிப்பை மேற்கொள்வதுடன் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுவோரும் மூவினம் சாந்தவர்களாக உள்ளனர்.

எனவே இத்தகையதொரு சூழமைவானது தமிழ்-சிங்கள-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையையும் புரிதலையும் ஏற்படுத்துவதற்குப் பேருதவியாக அமையும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த சிங்கள மாணவர்கள், தமிழ் மக்கள் மிகவும் நல்லவர்கள் என்று தமது இடங்களில்-தமது மக்களுக்கு சொல்லுகின்ற நிலைமையை நாம் அனைவரும் சேர்ந்து தோற்றுவிக்க வேண்டும்.

அதேபோல் சிங்கள மாணவர்கள் எங்களுடன் எத்துணை தூரம் ஒத்துழைத்தார்கள் என்பதாக தமிழ் மாணவர்கள் புகழ வேண்டும்.

இரண்டு நிலைகளிலும் முஸ்லிம் மாணவர்கள் எங்கள் சகோதரர்கள் என்பதான சூழமைவை ஏற்படுத்தும் போதுதான் எதிர்காலத்திலேனும் புத்திஜீவிகள் மத்தியில் இனவன்மங்கள் தோற்றம் பெறாமல்; இலங்கைத் தீவு, இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தம் என்ற நிலைமை ஏற்படும்.

மேற்குறிப்பிட்ட சூழமைவுக்குப் பாதகமான தாக்கங்கள் இருக்குமாயின் எதிர்கால இலங்கையும் விடிவு அற்றதாகவே இருக்கும். ஆகையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசியல் என்ற சாக்கடை கலவாத தூய்மை நிலவ அனைவரும் பாடுபடுவோம்.

# மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தை தற்போதைய அரசு பழிவாங்குகிறது முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தை பழிவாங்குவதாக முன்னாள் நீதியரசர் சரத்.என்.சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று பத்தரமுல்லையில் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமர் ரணிலுக்கும் அமைச்சர் சாகலவுகும்குழந்தைகளின்வேதனை புரிவதில்லை.

ஏனெனில் ஒரு குழந்தைக்கு தந்தையாகும் பாக்கியம் இவர்கள் இருவருக்கும் இல்லாததே இதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யோஷித குற்றமற்றவர் என்றும் அவர் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தொலைக்காட்சி தொடர்பான குற்றச்சாட்டு பொய்யானது. ஏனெனில் அந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் அவர் இல்லை யென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## 23ஆம் திகதி நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ இலங்கைக்கு வருகிறார்

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ எதிர்வரும் 23-ம் திகதி இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ 03 நாட்கள் இலங்கையல் தங்கியிருக்க உள்ளதுடன் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன் நியூசிலாந்து முதலீட்டு நிறுவனங்கள் மேற்கொள்கின்ற விவசாய வேலைத் திட்டங்களை நியூஸிலாந்து பிரதமர் ஆரம்பித்து வைக்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர இலங்கையிலுள்ள நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் க்ரஹம் மோர்டன் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (இ)

## ஜனாதிபதி பங்களாதேஷ் செல்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மார்ச்சில் பங்களாதேஷ் நோக்கி பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அழைப்பை ஏற்றே இந்த பயணம் இடம்பெறவுள்தாக பங்களாதேஷின் த டெய்லி ஸ்டார் செய்தி வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷில் உள்ள இலங்கையின் இராஜதந்திர தரப்பு தகவல்படி இலங்கை ஜனாதிபதியின் பயணத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த பயணத்தின்போது இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பலஉடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பங்களாதேஷ்க்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாக அமைந்துள்ளது.

ஏற்கெனவே அவர் சுகாதார அமைச்சராக இருந்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பங்களாதேஷ்க்கு பயணம் செய்துள்ளார். (இ)

## இரவுவேளைகளில் யானைத் தொல்லை வவுனியா செட்டிகுளம் மக்கள் அச்சம்

(வவுனியா)

தினமும் இரவு வேளைகளில் யானைகள் தங்களுடைய வாழை மரங்களையும் பயன்தரு மரங்களையும் சேதப்படுத்தி வருவதால் பயத்துடன் வாழ்ந்து வருவ தாக வவுனியா செட்டிகுளத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தினமும் மாலை 6 மணிக்குப் பின்னர் செட்டிகுளம், முகத்தன்குளம், பூசணிப்பிட்டி, வாரிக்குட்டியூர், இறாத்தம் பண்ணை, கிறிசாத்தவன் குளம், முதலியார்குளம் ஆகிய இடங்களில் இவ்வாறு யானைகள் சேதம் விளைவித்து வருகின்றன.

போர்க்காலத்தின் போது தாம் அதிக இழப்புகளைச் சந்தித்துள்ளதாகவும் நீண்ட காலத்தின் பின்னரேயே திரும்பவும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தங்களுடைய நிலங்களில் பயிரிட்ட தென்னை மரங்கள், மாமரங்கள், பலா மரங்கள், என்பன யாவும் யானைகளால் முற்று முழுதாக அழிக்கப்பட்டு விட்டன.

முத்தன்குளம் பகுதியில் ஒவ்வொரு காலபோக அறுவடையின் போதும் யானைகளால் பயிர்கள் அழிக்கப்பட்டு விடுவதாகவும் அம்மக்கள் புகார் செய்துள்ளனர்.

அதேநேரம் குரங்குகளும் அதேஇடங்களில் தமது கைவரிசையை காட்டியுள்ளன. இவ்வாறு பலமுறைப் பாடுகள் செய்யப்பட்டபோதும் அதை தடுப்பதற்குரிய எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்பிரச்சினையை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள், எடுக்கப்படுவதாக கூறி அம்மக்களை சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பி விடுகிறார்கள். செட்டிகுளத்திலுள்ள மாவட்டச் செயலாளர் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 14.02. 2016 ஞாயிறு யாழ் பிரதேசத்தில் இரும்புமதவடி, சக்களாவத்தை, கொடிகாமம், கலைவாணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, கரம்பன், வாழைத்தோட்டம், இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து ஏ9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குழி, பஸ்ரியன சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, மயிலப்புலம், மடத்துவெளி, ஆலடி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகாட்டுவான, செட்டிப்புலம், வங்களாவடி, வேலணை, மீசாலை, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய் துறைமுகம், கெற்பலி ஒரு பகுதி, கச்சாய் கடற்கரை, பாலாவி, கொடிகாமம, கலைவாணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, வறணி, கரம்பன், வாழைத்தோட்டம், கொடிகாமம், புங்குடுதீவு கடற்படைமுகாம், யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ்.மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம, US ஹொட்டல் பிரதிபொது முகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச) ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தல் வட்டக்கச்சி, இராமநாதபுரம், முழங்காவில், கனகபுரம், செல்வநகர், கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், வலைப்பாடு, வேரவில், நாச்சிக்குடா, வட்டக்கச்சி பாம், இரணைமடு விமானப்படை I மற்றும் II, 651 வது படைப்பிரிவு முகாம்,, 652வது படைப்பிரிவு முகாம, 2ஆம் அதிரடிப்படை படைமுகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை, வற்றாப்பளை விமானப்படை-I மற்றும் IIஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை, மகாகச்சக்கொடிய பொகஸ்வேவ வரை ஆகிய பிரதேசங்களிலும். மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




நமது தாய்நாட்டின் அடிப்படையாகவும் முதுகெலும்பாகவும் அதன் தேசிய வாழ்க்கை முழுவதும் கட்டப்படுவதற்கான உறுதியான அடித்தளப் பாறையாகவும் மதமே உள்ளது.

ஓ தற்கால இந்துக்களே, மன வசியத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். அதற்கான வழி உங்கள் சாஸ்திரங்களில் உள்ளது. அதைப்படியுங்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களின் உண்மை இயல்பைப் போதியுங்கள். உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித் தெழுகிறது என்பதைப் பாருங்கள்.

நமது மதம்தான் உண்மையானமதம். ஏனெனில் எல்லாவற்றையும் விட மேலாக அது துறவைப் போதிக்கிறது.


உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் (Self conscious) செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும், எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்.

ஒவ்வொரு நாட்டிற்கும் அதற்கேயுரிய பாதை ஒன்றுண்டு. அதுபோலவே ஒவ்வொரு நாட்டிற்கும் உயிர்நாடியான இலட்சியமும் ஒன்று உள்ளது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் அண்மையில் சிறப்புற இடம்பெற்றது.கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துவின் பழைய மாணவனும் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் வைத்தியருமாகிய வைத்தியகலாநிதி இரங்கநாதன் வரதன் கலந்து சிறப்பித்தார்.

## யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி



யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் வருடந்தோறும் நடத்தும் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி -2015 எதிர்வரும் 13, 14, (சனி, ஞாயிறு)பெப்ரவரி 2016 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ளஅரியாலை சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் 14 ஆம் திகதி (ஞாயிறு) பிற்பகல் 3 மணிக்கு நிகழும். இந் நிகழ்விற்கான பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவரும் ஹற்றன் நஷனல் வங்கியின் பம்மன் கடா கிளையின் முகாமையாளருமாகிய திருமதி. ஜெயந்தி சோமசேகரம் டி சில்வாவும் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

## விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்-2016 கே.சீ.சீ.சீ. அணியின் முதலாவது வெற்றி



(யாழ்ப்பாணம்)

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்திவரும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாவது தகுதி காண் போட்டி கடந்த 04 ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சீ.சீ.சீ. அணி ஜொலிஸ்ரார் அணியை 6 விககெட்டுக்களால் வெற்றிபெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றனர். சிவலக்ஸன்-10, மதூஸன்-44, சஜீவன்-32, பிரசன்னா-14, வாமணன் ஆட்டமிழக்காது 32, பகீரதன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயரூபன்-03, சிலோஜன்-03, சாம்பவன்-01, ராகுலன்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 4 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சத்தியன்-14, ஜெயரூபன்-74 (இந்தச் சுற்றுப்போட்டியில் முதல் அரைச்சதம் பெற்ற வீரர்) யனுதாஸ்-17, ராகுலன் ஆட்டமிழக்காது 36, சசிகரன் ஆட்டமிழக்காது-12 ஓட்டங்களை பெற்றனர்.

பிரசன்னா, பகீரதன், மதூஸன் தலா ஒரு இலக்கினை கைபபற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளை யாட்டுக்கழகம் 7 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு கே.சீ.சீ.சீ. அணி 6.35 புள் ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 2.23 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு வீதியோட்ட நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது.வீதியோட்ட நிகழ்வினை யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் ஆரம்பித்து வைப்பதையும் முதலாமிடத்தைப்பெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் வீதியோட்டத்தினை நிறைவுசெய்து பதக்கத்தினை பெற்றுக்கொண்ட 100 மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## நாட்டின்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்லிணக்க பொறிமுறைக்கான இணையத்தளம் ஆரம்பிப்பதில் பெரும் மகிழ்வடைகிறேன். இது 11 பேரைக் கொண்ட செயலணியாக இயங்கவுள்ளது. நாட்டில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றிற்கு எமது அரசு பொறுப்பு என ஜனாதிபதி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் நல்லிணக்கம், பொறுப்புகூறலை மீண்டும் மீண்டும் ஜனாதிபதியும் பிரதமரும் வலியுறுத்தி வருகிறார்கள். நாட்டின் அபிவிருத்தி முக்கியம் என்றால் மக்களின் மனதை வென்றெடுக்காமல் அபிவிருத்தியை பெறமுடியாது என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இலங்கையில் சமாதானம், நல்லிணக்கம், மீள்நிகழாமை மற்றும் இழப்பீடு, நீதி ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இச் செயலணி உருவாக்கப்படுகின்றது. இதனை சிலர் சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக உருவாக்கப்பட்டது எனவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரை மகிழ்ச்சிப்படுத்த உருவாக்கப்பட்டது எனவும் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் உண்மை அதுவல்ல.

நாம் இந்த நாட்டில் கடந்த காலயுத்தத்தின் காயங்களை மறக்கவும், நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றை உருவாக்கி சர்வதேச மட்டத்தில் இலங்கை நாட்டை ஒரு சமாதான நாடாக மாற்றுவதற்கே ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இச் செயலணியை உருவாக்குகின்றோம்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் நல்லிணக்கம் உருவாக்கப்படவேண்டும் என்பதற்காக முக்கியமான நடவடிக்கைகளை எடுத்தார். குறிப்பாக 3 ஆயிரத்து 300 ஏக்கர் மக்களின் காணி விடுவிப்பு, புலம்பெயர் அமைப்புக்களின் மேல் உள்ள தடை நீக்கப்பட்டமை, அரசியல் கைதிகள் விடுவிப்பு, குற்றத்தின் அடிப்படையில் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டமை, தமிழில் தேசியகீதம் பாடப்பட்டமை மற்றும் காணாமல்போனவர்களை கண்டறிய நடவடிக்கை எடுக்கின்றமை. வட கிழக்கில் சிவில் நிர்வாகத்தை உண்டாக்கியமை, சுயாதீனமான நீதிசேவையை உண்டாக்கியமை ஆகிய நல்லிணக்கத்திற்கான பலவிடயங்களை செய்திருக்கின்றது. மேலும் தொடர்ச்சியாக பல செயற்பாடுகளை இந்த அரசு செய்யவிருக்கிறது.

• எமது நாட்டில் கடந்தகால அவலம் மற்றும் பயங்கரவாதம் எந்த சந்தர்ப்பத்திலும் எப்பகுதியிலும் நடைபெறாமல் இருக்கவேண்டும். இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கமாட்டோம். உண்மையில் பாதிக்கப்பட்ட, பலியானவர்களின் குடும்ப நலன்களை பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம்.

இந்நிலையில் இந்தநாட்டில் சமாதானத்தை, நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதுடன், இலங்கை நாட்டவர்கள் சமாதானத்திற்கான பாதையில் பயணிக்க வேண்டும் என்பதையும் நாங்கள் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மேலும் இந்தச் செயலணி சுயாதீனமாக மக்களிடம் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வகையில் சுயாதீனமான பிரஜைகளை நியமித்துள்ளோம். இதில் மக்கள் அனைவரும் எத்துறையினரும் அச்சம் இல்லாமல் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை கூறலாம். பலருடைய கருத்துக்களையும் மீளாய்வு செய்து இக்குழு பகிரங்கப்படுத்தும் என்ன வடிவில் நல்லிணக்கம் அமைய வேண்டும் என்பதை அறிவிக்கும்.

சுதந்திரமாக கருத்துக்களை கூறுவதற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுக்குமாறு நாங்கள் புலனாய்வுதுறை, முப்படைத்தளபதிகள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பை கோரியுள்ளோம். மக்களின் உணர்வுகளை தூண்டி இனவாத அரசியல் செய்வதற்கு சிலர் முனைகிறார்கள். அதற்கு இடமளிக்காமல் சமாதானமும் சுபீட்சமும் எமது நாட்டில் மிளிர அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பக்தி...



வாத்தியம் சகிதம் மாநாடு நடைபெறும் கைலாசபதி கலையரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் ஆரம்பமான அனைத்துலக சைவ மாநாட்டின் தொடக்க நிகழ்வுகளாக; நந்திக்கொடி ஏற்றல், மங்கல விளக்கேற்றல், வேதபாராயணம், திருமுறை ஓதல், நடனம் என்பன நடைபெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக நடைபெறும் அனைத்துலக சைவமாநாட்டின் தொடக்க நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் க.பாஸ்கரன் ஆதார சுருதி உரையை ஆற்றினார். தொடர்ந்து ஆசியுரைகள், வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

அனைத்துலக சைவ மாநாட்டினை ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விழாக் கோலம் பூண்டிருந்ததுடன் மகர தோரணங்களும் நந்திக்கொடிகளும் சேர்ந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் பக்திச்சூழலை ஏற்பத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## விசுவமடுவில்...

விசுவமடு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள கடையொன்றில் ஏற்பட்ட தீயினால் குறித்த கடை அமைந்திருந்த கடைத்தொகுதியில் உள்ளடங்கியிருந்த மூன்று கடைகள் முற்றாக எரிந்துள்ளதோடு மேலும் ஒரு கடை பகுதியளவில் சேதத்திற்கும் உள்ளாகியுள்ளது.

குறித்த கடைத் தொகுதியில் அமைந்திருந்த புகைப்படக்கலையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணியளவில் உருவான தீ அத்தொகுதியில் அமைந்திருந்த பல்பொருள் விற்பனை நிலையம் மற்றும் அலுமினிய பிற்றிங் வேலைகளை மேற்கொள்ளும் கடைகளுடன் அருகிலிருந்த மற்றுமொரு கடைக்கும் பரவியதால் அக்கடைகளும் தீயில் எரிந்து நாசமாகின. புகைப்படக்கலையகத்தில் உருவான தீ மிக வேகமாகப்பரவத் தொடங்கியதும் தீயை அணைக்கும் செயற்பாட்டில் நகர்ப்பகுதி மக்கள் தீவிர மாக ஈடுபட்டனர் இருப்பினும் தீ கட்டுப்பாட்டை மீறி வேகமாகப் பரவியதால் கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

இதனால் குறித்த கடைகளின் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் பல இலட்சம் ரூபா இழப்பினை எதிர்கொண்டுள்ளனர்

இதேவேளை தீ ஏற்பட்டதற்கான உறுதியான காரணம் கண்டறியப்படாதபோதும் மின் ஒழுக்கு காரணமாகவே தீ ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.(செ-295)

## காணாமல்...

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் காணாமல்போன தமிழ் மக்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண பாராளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இதையடுத்து கருத்து தெரிவித்த அமைச்சர் வஜிர அபேகுணவர்தன, இதற்காக கண்ணில் காணாத சான்றிதழ் என்ற பெயரிலான சான்றிதழை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி யுத்தத்தினால் காணாமல்போன அனைவருக்கும் இந்த சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இதற்கு அமைய, யுத்தத்தினால் காணாமல்போன அனைவருக்கும் இந்த சான்றிதழை வழங்க பாராளுமன்ற அனுமதி கிடைத்துள்ளது.

யுத்தத்தினால் காணாமல்போனோரின் உறவுகள், அவர்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் இந்த சான்றிதழை கொண்டு முன்னெடுக்க முடியும் என பாராளுமன்றத்தில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை காணாமல்போனவர்களுக்கு வழங்கப்படும் இச் சான்றிதழ் ஓர் தற்காலிக அடிப்படையிலானதாகும்.

இந்த சான்றிதழ் காணாமல்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரச நிறுவனங்களில் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியமைக்கும்.

காணாமல்போனவர்களுக்காக வழங்கப்படும் சான்றிதழ் குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அவ் ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல்போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போனவர்கள் உயிரிழக்கவில்லை என கருதினால் அவர்கள், காணாமல் போய்விட்டார்கள் என அடிப்படையில் சான்றிதழ் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்களாக கருதப்படுகின்றது. (செ-12)

# தமிழரசுக் கட்சி-மங்கள சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையேயான விசேட கலந்துரையாடல் ஒன்றுநேற்றையதினம் யாழ் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள தழிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் நல்லிணக்கம் மற்றும் ஆலோசனைக்கான இணையத்தளம் அறிமுகப்படுத்தலும் அது தொடர்பாக சிவில் சமூகத்தினரின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த அமைச்சர், நேற்றையதினம் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

இக் கலந்துரையாடலில் தழிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சரவணபவன், முன்னாள் வலிவடக்கு பிரதேச சபை தலைவர் சுகிர்தன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.(செ-9)

# எச்சரிக்கை சமிஞ்ஞையை மீறி ரயில் கடவையை கடந்த மூவருக்கு ரூ.5 ஆயிரம் தண்டப்பணம் விதிப்பு

## சாரதி அனுமதிப்பத்திரமும் ரத்து

யாழ்.ரயில் கடவையில் எச்சரிக்கை சமிஞ்ஞை விடுக்கப்பட்டிருந்த நிலையில் ரயில் கடவையை கடந்த குற்றத்துக்காக 3 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டமும் ஒரு வருடத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்யுமாறும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ரயில் வருவதற்கு முன்னர் எச்சரிக்கை மணி ஒலிக்கப்பட்டிருக்கும்போது ரயில் கடவையை கடந்த 3 பேரை பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் மன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது நீதிபதி அவர்களை கடுமையாக எச்சரித்ததுடன் 5 ஆயிரம் ரூபாய் தண்டமும் ஒரு வருட காலத்துக்கு அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யுமாறும் தீர்ப்பளித்துள்ளார். (செ-9)

# சர்வதேச அழுத்தத்துக்கு நான் அடிபணிபவன் அல்ல -ஜனாதிபதி

சர்வதேச சக்திக்கோ, அழுத்தத்திற்கோ அடிபணியும் ஒருவர் தாம் அல்லவெனவும் நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்க உயிர் தியாகத்துடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பலாங்கொடையில் கொங்ரீட் மின்கம்பங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நேற்று திறந்து வைத்த சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது அரசாங்கத்தின் கொள்கையிலுள்ள சில விடயங்கள் தொடர்பில் சமூகத்திற்குள் விவாதிக்கப்படுகின்றது. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சுதந்திரமாக செயற்படுவதற்கு இன்று இடமளிக்கப்ப ட்டுள்ளது. இவை அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பிரஸ்தாபிப்பதற்கு ஊடகங்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அவற்றில சில உண்மையானவை என்பதோடு, சில உண்மைக்குப் புறம்பானவையாகவும் உள்ளன.

சிலவற்றை ஏற்றுக்கொள்வார்கள். சிலவற்றை முற்றாக நிராகரிப்பார்கள். மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி நாட்டைக் கட்டியெழுப்பி முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளேனே தவிர சில அரசியல் விரோதிகள் கூறுவதைப் போன்று இந்த நாட்டை அழிப்பதற்காக அல்ல என ஜனாதிபதி தெரிவித்தார். (செ-12)

# இராணுவ சிப்பாய் கொலை...

கடந்த 22 வருடங்களாக நடைபெற்று வந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்றுமுன்தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மயிலிட்டி விடுதலைப் புலிகளுடனான முன்னணி காவலரண் பகுதியில் இருந்த இராணுவ காலவரண் ஒன்றில் குசும்சிறி என்ற இராணுவ சிப்பாய் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இறந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இந்த மரணம் தொடர்பில்அவருடையநேரடிஉயரதிகாரிகளான சுமதிபால மற்றும் ஜயசுந்தர ஆகிய இரண்டு இராணுவ கனிஷ்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிராகசட்டமா அதிபர்கொலைக் குற்றம் சுமத்தி யாழ் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

கடந்த 22 ஆண்டுகளாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று மற்றும் யாழ் மேல் நீதிமன்று ஆகியவற்றில் இந்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான நீதிமன்ற விசாரணையின்போது, இறந்தவர், இராணுவ காவலரணுக்குள் நின்ற போது நடுநிசி நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

கொலைக் குற்றம் சுமதப்பட்ட எதிரிகள் இருவரும் காவலரணுக்கு வெளியில் இன்னுமொரு இராணுவசிப்பாயுடன்தமது துப்பாக்கிகள் சகிதம் நின்றிருந்தனர்.

வழக்குத் தொடுநர் தரப்பு இராணுவ சிப்பாய் ஒருவரின் சாட்சியத்தின்படி, இது நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

சூடு நடத்தப்பட்ட துப்பாக்கி இறந்துபோன இராணுவ சிப்பாய்க்கு அலுவலக ரீதியாக வழங்கப்பட்ட துப்பாக்கி என்பதும் அவர் இராணுவ காவலரணுக்குள் சென்ற போது அந்தத் துப்பாக்கியைத் தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தார் என்பதும் சாட்சியங்களின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டது.

அதேநேரம் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகளின் வசமிருந்த துப்பாக்கிகள், எதுவும் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் விசாரணையின்போது நிரூபணமாகியிருந்தது.

இறந்தவரின் மரணத்திற்குக் காரணமாகிய துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கருதப்படும் துப்பாக்கியைப் பகுப்பாய்வு செய்த அரச இரசாயன பகுப்பாய்வாளர் அது இறந்தவரின் துப்பாக்கி என்பதையும், அந்தத் துப்பாக்கியில் இருந்தே மரணத்தை ஏற்படுத்திய துப்பாக்கிக் குண்டு புறப்பட்டிருந்தது என்பதையும் ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பித்து சாட்சியமளித்திருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பை வழங்கியபோது, நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்ததாவது,

கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள்தான் நேரடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்பதற்கு இந்தவழக்கில் கண்கண்ட சாட்சியில்லை.

அத்துடன் சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியமும் இல்லை. எதிரிகளின் துப்பாக்கிகள் எதுவும் கொலைக்குப் பயன்படுத்தப்படவில்லை. எதிரிகளுக்கு எதிராக சாதாரண

சந்தேகமும்கூட வழக்குத் தொடுநரால் எண்பிக்கப்படவில்லை. எனவே இரண்டுஎதிரிகளையும் இந்தநீதிமன்றம் விடுதலை செய்கின்றது என்றார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த முதலாவது எதிரி சுமதிபாலவின் மனைவி கடந்த 22 ஆண்டுகள் எனது கணவன் வேலையில்லாமல் ஒவ்வொரு நீதிமன்றமாக ஏறி இறங்கினார்.

இறுதியில் இப்போதுதான் உண்மைவென்றது என அவர் அழுகைக்கிடையே கூறினார்.

நீதிமன்றில் கடமையில் இருந்த சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிசார் அவரை ஆசுவாசப்படுத்தி, வெளியில் அழைத்துச் சென்றனர்.

இந்தத் தீர்ப்பையடுத்து, விடுதலைபெற்ற இரண்டு எதிரிகளும் நீதின்றத்தில் தலைவணங்கி மரியாதை செலுத்திவிட்டு வெளியேறினர். இவ்வாறு விடுதலைபெற்ற தினத்தன்று முதலாவது எதிரிக்கு 64 வயது என்பதும் இரண்டாம் எதிரிக்கு 48 வயது என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-9)

# மோ.சைக்கிள் விபத்து...

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் கரவெட்டி யாக்கருச் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குடவத்தை துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான செல்லத்தம்பி செல்வராஜா (வயது-29) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேலும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இராசநாயகம் கோகுலன் (வயது-29), குடவத்தை துன்னாலை தெற்கைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வரூபன் (வயது-18) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்தசெல்வராஜாமோ.சைக்கிளின் பின்னால் செல்வதீபனை ஏற்றிக்கொண்டு முள்ளி வீதி வழியாக யாக்கருச் சந்திக்கு வந்ததாகவும் கோகுலன் என்பவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு உணவு எடுத்துக்கொண்டு கலிகைச் சந்தி வழியாக யாக்கருச் சந்திக்கு மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவருகிறது.

இவ்வாறு வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் யாக்கருச் சந்தியில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் செல்வராஜா செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் ஓரமாகத் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் அவரும் தூக்கி எறியப்பட்டார்.

இதன்போது தலையில் பலத்த அடிகாயத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய இளைஞர்கள் இருவரும் படுகாயங்களுக்குள்ளாகினர்.

வயலுக்கு உணவு எடுத்துச் செல்லப்பட்ட மற்றைய மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியின் நடுவே காணப்பட்டதுடன் உணவுப் பார்சல்களும் விபத்து நடந்த இடத்தில் சிதறிக் காணப்பட்டன.

படுகாயமடைந்த இருவரும் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## ஜகத் புஷ்பகுமார...

சம்பந்தமாக கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று ஆஜராகியுள்ளார்.

அவர் நேற்றுக் காலை 09.15 மணியளவில் ஆணைக்குழு முன் ஆஜராகியதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தல பிரதேசத்தில் சுமார் 45 ஏக்கர் தனியார் நிலத்தில் தென்னை பயிரிடுவதற்கான கன்றுகள், தொழிலாளர் மற்றும் பிற வசதிகளை தெங்கு பயிர் செய்கை சபை மூலம் பெற்றுக் கொண்டது தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று ஆணைக் குழுவில் ஆஜராகியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளுக்காக அவர் நேற்று முன்தினமும் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி இருந்தார். (செ-12)

## கேரள கஞ்சா...

கொண்ட இந்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேக நபரை விரைவில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பிரதமர் இன்று...

உரையொன்று நிகழ்த்தப்படவுள்ளது.

இன்று பகல் ஒரு மணிக்கு பதுளையிலிருந்து இந்த வசேட உரையை நிகழ்த்தவுள்ளதாக பிரதமர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

உரையின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மல்வத்து, அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெறவுள்ளார்.

இதுதவிரமறைந்த முன்னாள் ஜனாதிபதி டீ.பி.விஜேதுங்கவின் நூறாவது பிறந்ததின நிகழ்வுகள் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் இன்று கண்டியில் இடம்பெறவுள்ளது. (செ-12)

சிகரம் மூலம் விண்ணப்பித்தவர்
கனேடிய Lambton College
அனுமதி பெற்றார்!
Student Visa தொடக்கம்
PR வரையில்
பெற்றுக்கொள்ள
வாசல் திறக்கிறது
CANADA
அனுபவம் வாய்ந்த கனேடிய குடிவரவு முகவர்கள் ஊடாக...
Student Visa
Express Entry Visa
O/L or A/L உடன் Diploma / Degree கற்கைநெறி நிறைவில்
தொழில் வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Degree / Diploma வுடன் 1 வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள்
கனேடிய No.1 பல்கலைக்கழகங்களான
UNIVERSITY OF TORONTO
YORK UNIVERSITÉ UNIVERSITY
மற்றும்
George Brown College - Toronto, Niagara College - Ontario
(C-3679)
SIKARAM VISA SOLUTIONS
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
EXPERIENCE 7 YEARS EXPERIENCE
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



மணிவிழா நாயகனை
வாழ்த்துகின்றோம்
"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் கா்ருண்யன்"
உயர்திரு E.S.P.நாகரத்தினம் அவர்கள்
இன்நறுங்கனிச் சோலை செய்தல்
இனிய நீர் தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாலாயிரம் நாட்டல்
பின்னருள்ள தர்மங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
என்ற கோட்பாட்டுடன் வாழும்
E.S.P நாகரத்தினம் வாழ்க வளமுடன்
வாழ்த்துவோர்
சண்வாமதேவன் ஓய்வுநிலை அதிபர்
(யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்,
விக்னேஸ்வரா கல்வி நிலையம்.103, பொற்பதி றோட், கொக்குவில்.
(C-3678)

விற்பனைக்குண்டு
KORD
கோர்ட் மெசின் பிளேட்
விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 077 918 4178



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
செய்திகள்
புகைப்படங்கள்
நிகழ்வுகள்
பேசும் படங்கள்
Viber
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல.
076 636 3378



நட்சத்திர வீரனை பாராட்டுகிறோம்
புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனும்
யங் ஹென்றிசியன் விளையாட்டுக் கழகத்தின் நட்சத்திர வீரனுமாகிய
செபமாலைநாயகம் ஞானரூபன்
அவர்கள் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான
"Most Popular University Sports Star-2015"
ஆக தெரிவு செய்யப்பட்டமையையிட்டு
எமது பாடசாலை, கழகம், நிறுவனம்
சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் :-
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல.6,ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3490
(C-3680)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.